பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 19 புதன்கிழமை 03.07.2024 கதிர் 238

# அதிகாரப் பகிர்வை வழங்குவதே சம்பந்தனுக்கான உயர் அஞ்சலி

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்,மறைந்தநாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றியதாவும்,அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டியவிதம் தொடர்பில் அவருக்கு தனியான நிலைப்பாடு இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் விசேட உரையொன்றை நிகழ்த்தி இரங்கலைத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவர்மேலும்உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:**

**நான் இந்த உரையை** ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தன்னை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கவிரும்பும்அனைத்துத் தரப்புடகளுடனும் சேர்ந்து பயணிக்கத் தான் தயார் என்று மாத்தறைக் கூட்டத்தில் தெரிவித்து தன்னோடுஇணைந்துகொள்ளுமாறு அனைருக்கும் அழைப்பும் ரணில் விக்கிரமசிங்கவால்விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய ஜனாதிபதியின் கீழ் தேசிய ஆளும் தரப்பு ஒன்றை அமைப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற குழு அறையில் ஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழுக்கூட்டத்தில்இந்த தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண முன்வைத்த ☞2

## கஜேந்திரகுமாருக்கு 3 மாதங்கள் விடுப்பு

தமிழ்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும்யாழ்மாவட்டஎம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நாடாளுமன்றத்தினால்3மாதங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம்நேற்றுகாலை9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கான விடுமுறை முன்மொழியப்பட்டது .

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு ஜூலை 2 முதல் 3 மாத காலங்களுக்கு விடுமுறையளிக்குமாறு வேண்டுகின்றேன் என லக்ஷ்மன் கிரியெல்லவினால் விடுமுறை முன்மொழியப்பட்டது. இதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்எம்.பி.யானசெல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்துதமிழ்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்டநாடாளுமன்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு ☞2

## சம்பந்தனுக்காக ஒக்டோபருக்குள் அரசியல் தீர்வொன்றைக் காண்க

### சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்து

ஜனாதிபதியின்பதவிக் காலம் வரும் ஒக்டோபருக்குள் நிறைவடைவதற்குள் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள். அதுவே சம்பந்தனுக்கானநன்றிக்கடனாக இருக்கும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின்யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கசம்பந்தனுக்கான அங்கீகாரத்தினைவழங்கி உரையாற்றியதை அடுத்தே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் ☞2

## செய்ய முடியாத பணியையே ஆளும் தரப்பு செய்து முடித்தது

### ஜனாதிபதி நேற்று விசேட உரை

கடன்மறுசீரமைப்பு என்கிற செய்ய முடியாத பணியை நாம் செய்து முடித்திருக்கின்றோம். அனைத்துக்கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஐ.எம்.எப்.வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்தது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த உரையின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அந்த உரையின் முழுவடிவம் வருமாறு,

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான சவாலான பயணம் தொடங்கிய நாள் முதல், நான் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் அது தொடர்பிலானவிடயங்களை முன்வைத்தேன். முதலில் நாங்கள் பின்பற்றி வரும் திட்டங்களை நாடாளுமன்றத்தில் ☞8

## சம்பந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார் ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இரா.சம்பந்தனின் பூதவுடலுக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஆர்.சம்பந்தனின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கஇறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் பூதவுடல்அஞ்சலிக்குவைக்கப்பட்டிருக்கும் தனியார் மலர் சாலைக்கு நேற்று பிற்பகல் சென்ற ☞2

## நாடாளுமன்றத்தில் இன்று சம்பந்தனுக்கு அஞ்சலி

நாடாளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமானமறைந்த பாராளுமன்றஉறுப்பினர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு இன்று பாராளுமன்றத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்படவிருப்பதால், இதில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை ☞2

### கடன் நிலைபேற்றை அடைவதில் இருந்த

## நிச்சயமற்ற தன்மைகள் முடிவுக்கு வந்துவிட்டன

### நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

இலங்கையில் கடன் நிலைபேற்றுத் தன்மையை அடைவதில் இருந்த அனைத்து நிச்சயமற்ற தன்மைகளும்தற்போது முடிவுக்குவந்துவிட்டதாக நிதிஇராஜாங்கஅமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் ☞2

## நாணய நிதியத்தின் மதிப்பீட்டறிக்கையும் இன்றுவரை சபைக்கு கிடைக்கவில்லை

### நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

சர்வதேச நாணய நிதியம் தயாரித்த தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் இன்றுவரை சபைக்கு சமர்ப்பிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரைக்கு நேற்று பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பஸில் ராஜபக்ச நிதியமைச்சருக்குவிரலை நீட்டி அறிக்கைகளை வழங்குமாறு கோரிய ரணில் விக்கிரமசிங்கவே இன்று ☞2

## கடன்மறுசீரமைப்பு உடன்படிக்கைகளில் ஒன்று இன்னுமே கைச்சாத்தாகவில்லை

### உண்மையை சபையில் விரித்த சஜித்

நாடாளுமன்றத்தின் புதன்கிழமை அமர்வு சம்பந்தனுக்காக ஒத்தி வைக்கப்பட வில்லை. கடன் மறு சீரமைப்பு தொடர்பான மூன்றாவது உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையினாலேயே அமர்வு ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎன்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றைமுன்வைத்து உரையாற்றும் ☞2

## முரல் மீன் குத்தியதில் மீனவர் உயிரிழப்பு.

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் இருந்து மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் முரல் மீன் குத்தி மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் குருநகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதான மைக்கேல் கொலின் டினோ என தெரியவருகின்றது. ☞2

## சில தகவல்களை மறைத்தே அரசு வெற்றி குறித்துப் பீற்றிக்கொள்கிறது

### சபையில் நேற்று சஜித் குற்றச்சாட்டு

சில தகவல்களை மறைத்தே கடன் மறுசீரமைப்பு வெற்றி என்று ஆளும்தரப்பினர் பேசுகின்றார் என்று குற்றஞ்சாட்டினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு ☞2

## இனி இது .....

இந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது. தமது தரப்பிலிருந்து ஆளும் தரப்புக்கு எவரும் செல்லமாட்டார்கள் என்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டதுதான். ஆனாலும் பூட்டை ஆளும் தரப்பினர் உலுப்பும் வேகத்தைப் பார்த்து அச்சம் எழுந்ததோ என்னவோ இப்படி ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளார்கள்.

..................

சுதந்திரக் கட்சியின் நிலைமை ''சொப்பன சுந்தரி''யின் நிலமையைவிட மோசமாகிக் கொண்டிருக்கின்றது. கட்சியை யார் வைத்திருப்பது என்கிற போட்டியில் இப்போது தயாசிறி ஜெயசேகரவும் இணைந்துள்ளார்

கட்சியின் முன்னாள் செயலாளரான தயாசிறியை முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன கட்சித் தலைவராக இருக்கும்போது பதவி விலக்கியிருந்தார். அதையெதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கில தயாசிறீ கட்சியின் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டது தவறு என்று முடிவு வந்திருக்கிறது.

இதனை அடுத்து கட்சியின் உத்தியோகபூர்வ செயலாளர் நானேதான். எனவே வாருங்கள் செயற்படலாம் என்று கட்சித் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் தயாசிறி.

ஏற்கனவே ஆளும் தரப்பு அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று ஆளும் தரப்பு அமைச்சர் நிமல் சிறீ பால டி சில்வா தலைமையில் கட்சி தங்களுடையது என்று உரிமை கோரி நிற்கின்றது. மறுபுறம் அமைச்சர் விஜேதாஸ ராஜகவைத் தலைவராகக் கொண்ட மைத்திரி அணி கட்சி தங்கள் கட்டுப்பாட்டில் என்கிறது. இந்த இரு குழுக்களும் மாறி மாறி போட்ட வழக்குகள் காரணமாக இரு தரப்பினரும் கட்சியினராக இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தயாசிறி மீதான தடை நீக்கப்பட்டிருப்பது புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றும் போது, அன்று என்னுடன் நாடாளுமன்றத்திற்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை.

மிகவும் கடினமான கால கட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி) மற்றும் தமிழ் தேசிய கூட்ட மைப்பு ஆகியவற்றை பிரதிநிதித் துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காகப் பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும்போது 'ரணில்,நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்தபோது, 1948இல் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்' என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை. ஆனால் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை.

அவர் அதற்கான போதுமான பங்கைச் செய்துள்ளார் என்று நினைக்கிறேன். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்குச் செய்யக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் என்றார்.

## சம்பந்தனுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் எமது தலைவர் சம்பந்தன் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் மற்றும் இரங்கல்களுக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜனாதிபதி தனது உரையின்போது தானும் சம்பந்தனும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு ஒன்றாக வருகை தந்ததை நினைவுபடுத்தினார். அத்துடன் சம்பந்தன் உயிருடன் வாழும் காலத்தில் தமிழ் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டிருக்கவேண்டும். துரதிஷ்டவசமாக அந்தச் செயற்பாடு இடம்பெறவில்லை.

ஆகவே ஆளும் தரப்பு மற்றும் ஜனாதிபதியிடம் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்க மான கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றேன். ஜனாதிபதியின் பதவிக்காலம் ஒக்டோபரில் நிறைவடையவுள்ள நிலையில் அதற்குள் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கி நகருமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## கஜேந்திர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்க சபை இணக்கம் வெளியிட்டது.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார்.

இரா.சம்பந்தன் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக புதன்கிழமை பி.ப 2 மணி முதல் மாலை 4 மணிவரை நாடாளுமன்ற கட்டடத்தின் முன்பக்கத்திலுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தில் வைக்கப்படவுள்ளது.

இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற பணியாட் தொகுதியினர் மற்றும் நாடாளுமன்றத்துடன் இணைந்த சேவைகளின் பணியாளர்களிடம் செயலாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சில....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

கானாவின் நிதியமைச்சர் சர்வதேச பிணைமுறி பத்திர தாரர்களுடன் நேரடியாகப் பேச்சு நடத்தி நாட்டின் கடனில் 37 சதவீதம் தள்ளுபடியைச் செய்துள்ள போதிலும், பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட எமது நாட்டு ஜனாதிபதியால் அவ்வாறானதொன்றை செய்ய முடியாது போயிருக்கிற-து.

அர்ஜென்டினா நிதியமைச்சர் 2023 இல் சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் நேரடியாகப் பேச்சு நடத்தி அவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து கடனில் தள்ளுபடியை ஏற்படுத்திக் கொண்டார்.

எனினும் எமது நாட்டின் ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற வகையில் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபடும் போது, சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் கலந்துரையாடல்களை மேற் கொண்டிருக்க முடியும்.

எமது நாட்டால் சிறந்த உடன்படிக்கையை எட்டக்கூடிய சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும், ஜனாதிபதியின் இயலாமையினால் அதனைப்பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், சீன அரசின் 13.8 மில்லியன் டொலர்கள் கடன், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 538 மில்லியன் டொலர் கடன்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. சில தகவல்களை நாட்டுக்கு வெளியிடாமல் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டின் வெற்றியைப் பற்றிப் பேசுகின்றனர் என்றார்.

## கடன்மறுசீரமைப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன் மறு சீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு நாட்களும் விவாதம் நடத்துவதென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் உரை மட்டுமே இடம்பெறுமெனவும் புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறாதெனவும் அதற்கு வேறு காரணமும் கூறியுள்ளனர்

ஆனால் உண்மை அதுவல்ல. கடன் மறுசீரமைப்பு தொடர்பான 3 உடன்படிக்கைகளில் இரண்டில் மாத்திரமே கைச்சாத்திடப்பட்டுள்ளது மேலும் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத நிலையிலேயே இவ்விடயம் நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சி நிழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது .இது பெரும் மோசடி. இது வெளிப் பட்டுள்ளதாலேயே புதன்கிழமை அமர்வை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளனர் என்றார்.

அதற்கு சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பதிலளிக்கையில், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் மேலும் ஒரு உடன்படிக்கை தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது தொடர்பிலும் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை தொடர்பாகவும் ஜனாதிபதி தனது விஷேட உரையில் சபையில் தெளிவுபடுத்தினார். அது தொடர்பில் மீண்டும் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

அந்த வகையில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத் திடப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு உடன்படிக்கை தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. அந்த பேச்சு நிறைவு பெற்றதும் இணக்கப்பாட்டுடன் அது சம்பந் தப்பட்ட பிரிவின் தகவல்களோடு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என்றார்.

## முரல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சம்பந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதோடு, அன்னாரின் குடும்பதினருக்கும் ஆறுதல் தெரிவித்தனர்.

கிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ராசமாணிக்கம் ஆகியோரும் இதன்போது இணைந்திருந்தனர்.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாகி அந்த அறிக்கைகளை வழங்காதிருக்கிறார். எனவே அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன், சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் பேச்சு சிறந்த முறையில் முன்னெடுக் கப்பட்டிருந்தால், சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு அறிக்கைகளை வெளியிட்டிருக்காது.

ஆளும் தரப்பின் அக்கறையின்மை குறித்து 2024 ஜனவரி 31 அந்தக் குழு அறிக்கையொன்றை விடுத்திருந்தது. ஆளும்தரப்பின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையும் நடந்த வரும் வேளையில், சர்வதேச பிணைமுறி பத்திரதார கடனாளர்களுக்கு அடிபணிந்து நடந்து கொண்டுள்ளனர் என்றார்.

## நிச்சயமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்புவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி தற்போது கிடைத்துள்ளது. கடந்த ஜூன் 26, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களாக இருதரப்பு கடன் வழங்குநர் குழு மற்றும் பரிஸ் கழகத்தின் நாடுகளுடன் உடன்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேதினம் சீனா எக்சிம் வங்கியுடன் உடன்பாடு எட்டப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு, கடன் மறுசீரமைப்பு

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# சம்மாந்துறை வீரமுனை வரவேற்பு கோபுரம் விவகாரம்; முஸ்லிம் எம்.பிக்கள் களத்தில் குரல்கொடுக்கவேண்டும்

## ஸ்ரீலங்கா உலமா கட்சி கோரிக்கை



(எஸ்.அஷ்ரப்கான்)

சம்மாந்துறை வீரமுனை வரவேற்பு கோபுரம் சம்பந்தமாக முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கெதிராக பிள்ளையான் களத்துக்கு வர முடியும் என்றால் முஸ்லிம் எம்.பீக்களைக் கொண்ட கட்சித்தலைவர்கள் பூனைகள் போல் சுருண்டுகொண்டுள்ளனரா ? என ஸ்ரீலங்கா உலமா கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

சம்மாந்துறை வீரமுனை வரவேற்பு கோபுர விவகாரம் தொடர்பாக ஸ்ரீலங்கா உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் இது விடயமாக மேலும் குறிப்பிடும்போது –

சம்மாந்துறை சம்பவங்கள் எலி கொழுத்து பூனையை பார்த்து அழைக்கும் நிலையை காட்டுகிறது. இவற்றுக்கு காரணம்சம்மாந்துறைஎமதுபேச்சைகேட்டுசொந்தக்காலில் நிற்காமல் விட்டமைதான்.

ஒரு காலத்தில் வீரம் என்றால் அதற்கு மறுபெயர் சம்மாந்துறை என்றிருந்தது. கலவர காலங்களின் போது சம்மாந்துறை இளைஞர்களின் வீரம், தியாகம் வரலாற்று பதிவானது. துப்பாக்கியை தூக்கிய பயங்கரவாதிகள் முன்பாக நெஞ்சு நிமிர்த்தி நின்ற ஊர் சம்மாந்துறை ஆகும்.

இப்போது முஸ்லிம் காங்கிரஸுக்கும், மக்கள் காங்கிரஸுக்கும்தேசியகாங்கிரஸுக்கும்அடிமைப்பட்டுப்போய் குத்துச்சண்டை வீரர் முஹம்மட் அலியின் கடைசி கால வாழ்க்கை போல் சம்மாந்துறை தள்ளாடுகிறது. இதற்கு என்ன காரணம்?

சம்மாந்துறைக்கு வாப்பா (எம்.பி) இல்லாத காரணமா?

அப்படி சொல்ல முடியாது.

கல்முனைக்கும் வாப்பா உள்ளார், என்ன பிரயோசனம். கல்முனை பஸாருக்கு செல்லும் வீதிகளை சட்டத்துக்கு முரணாக ஐந்து மணித்தியாலங்களுக்கு மறித்து முழு பசாரின் வியாபாரத்தையும் முடக்கினர். ஏன்? வாப்பா இருந்தும் எதிர்க்கட்சிக்கு முட்டுக்கொடுக்கும் முஸ்லிம் காங்கிரஸில் இருப்பதால் வாப்பா, அதிகாரம் இல்லாத ஐ. நா சபை போன்று இருக்கிறார். இதுதான் சம்மாந்துறையின் நிலையுமாகும்.

அம்மக்கள் ஹக்கீமையும் ரிசாத்தையும் நம்பிக்கொண்டிருந்ததால் பரமசிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு கருடனை பார்த்து சவுக்கியமா என கேட்பது போல் ரணில் அரசில் இருந்து கொண்டு பிள்ளையான் சம்மாந்துறை மக்களை பார்த்து சவுக்கியமா என எலி கொழுத்து பூனையை படுக்கைக்கு கூப்பிடுவது போல் சம்மந்துறை மக்களை பார்த்து மத தீவிரவாதிகள் என்கிறார். இவர் ஏதோ காந்தியின் தொண்டர் என்ற நினைப்பு போல் தெரிகிறது.

ஆகவே சம்மாந்துறை மக்களை எதிர்க்கட்சியிடம் விற்ற ஹக்கீமையும், ரிசாத்தையும் சம்மாந்துறை மக்கள் ஒதுக்கி சொந்தக்காலில் நிற்க முன்வராவிட்டால் இன்னும் பல அவமானங்களை சந்திக்க வேண்டி வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# குருநாகல் மாவட்டத்தில் 'உருமய' கலந்துரையாடல்



(எம் சியாஜ்)

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உருவான , காணி யற்றவர்களுக்கான 'உருமய' காணி உறுதி வழங்கும் நிகழ்வு குறித்து திங்கட்கிழமை வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

'உருமய' காணி உறுதி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்ட பயனாளிகளுக்கான காணி உறுதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி, குருநாகல் நகரில் அமைந்துள்ள வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட ஆளுநர் நஸீர் அஹமட் –

'உறுமய' காணி உறுதி வழங்கும் செயற்பாடுகளை விரைவுபடுத்துவது தொடர்பில் இதற்கு முன்னரும் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தோம்.

அதன் அடிப்படையில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பிரதேச செயலகங்கள் தோறும் விசேட பயிலுநர்களையும்நியமிக்கநடவடிக்கை மேற்கொண்டிருந்தோம். ஏனெனில் 'உறுமய' செயற்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்தப்படவேண்டிய ஒரு திட்டமாகும்.

தற்போதைக்கு எமது துரித செயற்பாடுகளின் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் சுமார் ஆயிரத்து இருநூறு பயனாளிகளின் 'உறுமய' காணி உறுதி வழங்கும் நிகழ்வின் கீழ் தங்கள் காணிகளுக்கானஉறுதிகளைப்பெற்றுக் கொள்ளவுள்ளனர். மாவட்டத்தில் உள்ள ஏனைய பயனாளிகளுக்கும் இதன் கீழ் காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

ஜனாதிபதியின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே இந்த 'உறுமய' காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. இரண்டுவருடங்களுக்கு முன்னர் நாடு இருந்த நிலையில் இவ்வாறானஎந்தவொருசெயற்திட்டமும் சாத்தியப்பட்டு இருக்காது. ஆனாலும் ஜனாதிபதியின் தூரநோக்கான செயற்திட்டத்தின் ஊடாக அது சாத்தியப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.



குறித்தகலந்துரையாடலில்ராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் சமன்பிரிய ஹேரத் எம்.பி., மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே குணரத்ன, மாவட்ட அரசாங்க அதிபர் ரத்நாயக்க உள்ளிட்ட மாவட்டத்தின் முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.(05)

# வடமேல் மாகாணத்தில் பாடசாலைகளை தெரிவுசெய்தல் தொடர்பில் கலந்தாய்வு

(எம் சியாஜ்)

வடமேல் மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை பாடசாலைகளில் நிலைப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றுமாகாணஆளுநர்நஸீர்அஹமட் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இதன்போது வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் முயற்சியால் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களைப் பொருத்தமான பாடசாலைகளில் நிலைப்படுத்தல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் நீண்ட காலமாக கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்தல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்கொண்டு செல்வதற்கு வசதியாக ஆசிரியர்களின்நியமனம்நடைபெறவேண்டும்என்று வலியுறுத்தியஆளுநர்நஸீர்அஹமட்,ஆசிரியர்களுக்கு அசௌகரியமற்ற முறையில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் ஊடாக அதனை சிறப்பான முறையில் மேற்கொள்ள முடியும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வடமேல் மாகாணத்தில் நிலவும் கணித, விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடங்கள் போன்றே தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்தும் கூடுதல் கரிசனை காட்டுமாறு ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் வடமேல் மாகாணத்தை கல்வியில் முன்னணி வகிக்கும் மாகாணமாக மேம்படுத்தும் இலக்குடன் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் ஓர் அங்கமாக, தற்போதைக்கு சுமார் நான்காயிரத்து இருநூறு (4200) ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், மேலும் ஆயிரத்து ஐந்நூறு(1500) ஆசிரியர் நியமனங்களை நிரப்புவதற்கான அனுமதியை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை தான் மேற்கொண்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

எனவே மாகாண மட்டத்திலான முழுமையான ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்த அறிக்கையொன்றை தமக்குச் சமர்ப்பிக்குமாறும் அவர் இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்புதல், ஏனைய வசதிகளை ஏற்படுத்தல் போன்ற கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து முன்னுரிமை அடிப்படையில் செயற்படுமாறு வலியுறுத்தினார்.

மேற்படி சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சு மற்றும் பிரதான அமைச்சின் செயலாளர் திருமதி நயனா காரியவசம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் முதிதா ஜயதிலக்க உள்ளிட்டோருடன் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## துணிவிருக்கிறதா ரணிலுக்கு?

பேச்சு பல்லக்கு; தம்பி கால்நடை என்றொரு சொலவடை தமிழில் உண்டு. பல்லக்கை நான்கு பேர்கள் தூக்கிக்கொண்டு மெல்லிய ஓட்டமாகக் கொண்டு சென்றுவிடுவார்கள். அதனால் அதன் வேகம் ஒருவரின் சாதாரண நடை வேகத்தைவிட அதிகமாக இருக்கும். அதுபோன்றே சிலர் செய்வதாகச் சொல்லுகின்ற வேகத்தில் எதையும் செய்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்டவே அந்தச் சொலவடை பயன்படுத்தப்படுகின்றது. யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ அரசுத்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு தமிழர் அரசியல் விடயத்தில் நன்கு பொருந்தும்.

பெருந் தலைவர் சம்பந்தனின் இரங்கல் உரையில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதைப் பார்க்கின்றபோது, இந்தச் சொலவடைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

சம்பந்தனும் தானும் ஒன்றாக நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தவர்கள் என்று கூறிவரும் அரசுத் தலைவர் தாங்கள் இருவரும் இருக்கும்போதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடவேண்டும் என்று தெரிவித்துவந்தார். ஆனால், தீர்வு நோக்கிய பாதையில் அவர் ஒரு சிறு அடிகூட எடுத்து வைக்கவில்லை. தன்னுடன் நாடாளுமன்றத்திற்குள் சமகாலத்தில் நுழைந்தவர்களில் கடைசி நபராக சம்பந்தரும் மறைந்துவிட்டார் என்பதை ரணில் நேற்றைய தனது உரையிலும் குறிப்பிட்டார். இப்போது எஞ்சியிருப்பவர் அவர் மட்டும்தான். அவரது சொற்படி அவர் காலத்திற்குள் அவர் ஒரு அரசியல் தீர்வைக் கண்டாகவேண்டும்.

அதனால்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசுத் தலைவரிடம் ஒரு கோரிக்கையை நேற்றே முன்வைத்தார். ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலம் வரும் ஐப்பசி மாதம் முடிவுக்கு வருவதற்கிடையில் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணும்படி ரணிலிடம் அவர் கேட்டார்.

இதற்குமுன்னர் கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தீர்வைக் காணாத ரணில் இன்னும் நான்கே மாதங்களில் ஒரு தீர்வை முன்வைக்க முடியும் என்பது இலங்கை அரசியல் வரலாற்றுப்படி சாத்தியங்கள் மிகக் குறைவான ஒன்றே.

ஆனால், அரசியல் தீர்வுகாண்பதற்கான தனது விருப்பு உண்மையானது என்பதை நிரூபிப்பதற்கான அறிகுறியாக, சம்பந்தனுக்கான இரங்கல் உரையில் தான் குறிப்பிட்டது மனதாரச் சொல்லப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கான அறிகுறியாக, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்று கூட்டமைப்புடன் தான் இணங்கிக்கொண்டவற்றையாவது ரணில் வைகாசி மாதத்திற்குள் நிறைவேற்ற வேண்டும். அது அரசியல் வெளியில் முற்றிலும் சாத்தியமான ஒன்றே.

தனது அஞ்சலி உரையில் ரணில், அதிகாரப் பகிர்வு தொடர்பில் சம்பந்தன் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கைச் செய்துள்ளார் என்று நினைக்கிறேன். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்குச் செய்யக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார். அவர் அதை உளப்பூர்வமாகத்தான் சொல்லியிருந்தார் என்றால், மிகக் குறைந்தபட்ச அரசியல் நேர்மையாளராக ரணில் இருப்பாரானால், சம்பந்தனின் ஆத்மா சாந்தியடையும் விதத்தில் அரசியல தீர்வுக்கான முதல் அடியையாவது அவர் துணிந்து எடுத்து வைக்கட்டும்.

பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை என்றளவிலாவது இதுவிடயத்தில், ரணிலால் செயற்படமுடியுமா? அதற்கான அரசியல் துணிபு அவருக்கு இருக்கிறதா?

# தரவுகள் அவதானம்

ந.பவித்ரா

காவலர்களைவிட திருடன் புத்திசாலி என்று ஒரு சொலவடை உண்டு. அது எந்தெந்த குற்றங்களுக்குப் பொருந்துமோ என்னவோ, இணைய வெளி குற்றங்களுக்கு சர்வ நிச்சயமாய் பொருந்தும். இலங்கையில் இணைய வெளிக் குற்றங்கள் அண்மைக் காலங்களாக அதிகரித்திருக்கின்றன என்கிறார்கள் பொலிஸார். அதிலும் வெளிநாடுகளில் இருந்து வந்து இலங்கையில் தங்கியிருப்பவர்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய மோசடிகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. இது இலங்கையின் பிரச்சினை மட்டுமல்ல. உலகின் பொதுப் பிரச்சினை.



அதற்கு சமீபத்திய உதாரணம் பிரிட்டனில் உள்ள சான்டாண்டர் வங்கியில் நடைபெற்ற தரவுகள் திருட்டு. கடந்த மாதம் அந்த வங்கி ஒரு குறிப்பிடத்தக்க இணைய பாதுகாப்பு மீறலை எதிர்கொண்டது. இது உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களையும் ஊழியர்களையும் பாதித்தது. வங்கி வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தரவுகள் அனைத்தையும் ஷைனி ஹன்ட்டர்ஸ் என்ற ஹேக்கிங் குழு திருடியதோடு, திருடப்பட்ட தரவுகளை திரும்பப் பெற இருபது லட்சம் டாலர் கொடுக்குமாறு சான்டாண்டரை மிரட்டியுள்ளது. இதைப் பார்த்து மற்ற வங்கிகள் அங்கு பீதி அடைந்துள்ளன.

கடந்த சில ஆண்டுகளாகவே தரவுகள் திருட்டு என்பது பல நாடுகளில் தீவிரமாய் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தில் உள்ள 'கேப்பிட்டல் ஒன்' நிதி நிறுவனத்திலும் தரவுகள் திருட்டு நடந்துள்ளது. பத்து கோடி பேரின் தரவுகள் களவு போயின.

சில மாதங்களுக்கு முன் ஆஸ்திரேலியாவிலும் இந்த தரவுகள் திருட்டு பேசுபொருளானது. ஆஸ்திரேலியாவில் உள்ள மொத்த மக்கள் தொகை இரண்டு கோடியே 55 ஆயிரம்தான். அதில் ஒரு கோடி மக்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளது தெரியவந்தது. அந்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ஆப்டஸின் தலைமை நிர்வாகி இதற்காக பொதுவெளியில் மன்னிப்பு கோரியது. இதன் விபரீதத்தை நமக்கு உணர்த்தும்.

இந்தியாவிலும் இப்படி பல்வேறு சம்பவங்கள் இருந்தாலும் ஒரு தனியார் விமானத்தில் பயணித்த 45 லட்சம் பயணிகளின் விவரங்கள் மற்றும் பீட்சா நிறுவனத்தில் ஆர்டர் செய்த பயனாளர்களின் விவரங்கள் போன்றவை திருடப்பட்டுள்ளன.

இப்படி தரவுகள் திருட்டு பற்றி தோண்டத் தோண்ட பல தகவல்கள் வந்த வண்ணம் இருக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள் இணைய தாக்குதல்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தலை எடுத்துக்காட்டுவதோடு வலுவான இணைய பாதுகாப்பின் அவசியத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது.

25 வருடங்களுக்கு முன்பு வரை நம் வீட்டுக்கு ஒன்றுக்கு இரண்டு பூட்டு போட்டுக் கொண்டால் பாதுகாப்பாக இருப்பதைப் போன்று உணர்வோம். இன்று நம் பணம் வங்கியின் சேமிப்பு கணக்கில் இருப்பு இருந்தாலும் அவநம்பிக்கை பரவுவது போல் இருக்கிறது. வீடுபுகுந்து கொள்ளை அடிப்பது, வழிப்பறி என பல திருட்டுகளை கேள்வியுற்ற நமக்கு இந்த இணைய வழிப்பறி அசாதாரணமாக இருக்கிறது.

உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு நம் கணக்கிற்குள் ஊடுருவுகிறார்கள். இன்றைய தேதியில் பொதுவாக ஒரு நாளைக்கு மூன்று நபர்களாவது நம்மை அலைபேசியில் அழைத்து நலம் விசாரிக்கிறார்கள். நமக்கு கடன் கொடுக்க, பணம் தேவையா என்பதை கேட்டு பெறுவதும், எங்கள் நிறுவனத்தில் இது போன்ற சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெரிவிப்பதும் என தேவையற்ற அழைப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன.

நமக்கு இந்த நேரத்தில் இது தேவை என்பதை அவர்கள் எப்படி அறிந்தார்கள்? நாம்தான் நம்முடைய கைப்பேசி எண்ணை கேட்கும் இடத்தில் எல்லாம் வள்ளல் பரம்பரை போல ஒன்றுக்கு இரண்டாக வழங்கிவிட்டு வருகிறோமே! பல்பொருள் அங்காடி, வணிக நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், வங்கி, கல்வி நிலையங்கள் என அனைத்திலும் நம் கைப்பேசி எண் அவசியத்திற்காகவும் அவசியம் இல்லாமலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த கைப்பேசி எண் நம்முடன் மட்டுமா நின்றுவிடுகிறது? கைப்பேசி எண்ணை வங்கி, இணைய வர்த்தகர் என ஏராளமானவர்களுடன் இணைத்திருக்கிறோம்.

இப்படி நம் கைப்பேசி எண்ணை பிடித்து ஆராய்ந்தாலே நம் தரவுகள் அனைத்தும் வெளிச்சத்துக்கு வந்துவிடும். இப்படியெல்லாம் தகவல் திருட்டுக்களைப் பற்றி கேள்விப்படும் போது படித்தவர்களுக்கே அச்சமாக இருக்கையில் நாலு எழுத்து படிக்காத அல்லது தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றி சரிவர உபயோகிக்கக் தெரியாத சாமானியர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை நினைத்தால் கவலையாக இருக்கிறது.

சரி, நம்முடைய தரவுகள் என்றால் அது எப்படிப்பட்ட தகவல்களாக இருக்கும் எனில், நம்முடைய பெயர், குடும்ப உறுப்பினர் விவரம், பிறந்த தேதிகள், பண அட்டைகள் விபரம், பேசி எண்கள், நமது தேவைகள், நமது விருப்பங்கள் என இப்படி. இதை வைத்துக்கொண்டு நம்முடைய கணக்குகளுக்குள் நுழையும் கடவுச்சொல்லை சுலபமாக அவர்களால் ஊகிக்க முடியும்.

பெரும்பாலானவர்கள் அவர்களுடைய பிறந்த தேதி, திருமண நாள், பிள்ளைகளின் பிறந்த நாள் அவர்களின் முதல் எழுத்து என்று கடவுச்சொற்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஊகிக்க முடியாத கடவுச்சொற்களை வைப்பதன் மூலமும் அவ்வப்போது மாற்றிக் கொள்வதன் மூலமும் நம்மை நோக்கிய இணைய தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம்.

நம்மில பெரும்பாலானோருக்கு இணையத்தை மின்னஞ்சல், தகவல் தேடலுக்கு மட்டுமே பயன்படுத்த தெரியும். ஆனால் இன்று இளைஞர்கள் மத்தியில் இருண்ட இணையம் பிரபலம் அடைந்து வருகிறது. இதைப் பயன்படுத்துவது சட்டத்துக்குப் புறம்பானது அல்ல. தொடக்கத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக பயன்படுத்தத் தொடங்கியது தற்போது குற்றச் செயல்களுக்காக அதிக அளவு உபயோகப்படுகிறது.

யார் வேண்டுமானாலும் தன் உண்மை அடையாளத்தை இணையத்தில் கசியவிடாமல் இறங்கி பணியை முடித்துக் கொள்ள இருண்ட இணையம் பயன்படும். கள்ளச் சந்தை போலவே இணையத்தின் கறுத்த பக்கமே இருண்ட இணையம். இதன் மூலம் போதை பொருட்கள் உட்பட சட்ட விரோதமான பொருட்கள்கூட விற்கப்படுகின்றன.

இணையத்தில் நடக்கும் குற்றங்களைத் தடுக்க உலக நாடுகள் விதித்துள்ள சட்ட திட்டங்களுக்கு இந்த இருண்ட இணையம் கட்டுப்படுவதில்லை. இதன் காரணமாக பல தவறுகள் நடக்கின்றன.

அண்மையில் ஒரு தனியார் பாடசாலைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. ஆராய்ந்து பார்த்தால் இறுதியில் அந்தப் பள்ளியிலேயே படித்துவரும் ஏழாம் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் அந்த மிரட்டலை மின்னஞ்சலில் அனுப்பி இருக்கிறான் என்பது தெரிந்தது. இதைப் பார்த்து அந்தப் பாடசாலை நிர்வாகம் மட்டுமல்ல காவல் துறையும் அதிர்ந்தது. அந்த அளவுக்கு இருண்ட இணையத்துக்குள் சென்று நடமாடும் வழக்கத்தை இளம் தலைமுறையினர் அதிகரித்து வைத்துள்ளனர்.

காவல்துறையும் அரசும் இந்த இருண்ட இணைய பயன்பாட்டாளர்களை கண்காணித்தாலும் அது போதுமான பாதுகாப்பை வழங்காது. இந்த இருண்ட இணையத்தில்தான் திருடப்பட்ட நம்முடைய தரவுகள் ஏராளமாக கொட்டிக் கிடக்கின்றன. சட்ட விரோத பணப் பரிவர்த்தனைகள் மட்டுமல்லாது சாமானியர்கள் மீதான பண மோசடியும் இதில் அடங்கும்.

நாம் என்ன நாட்டின் பிரதமரா, ஒரு இயக்கத்தின் தலைவரா, முக்கிய புள்ளியா, நம் தகவலை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன சாதிக்கப் போகிறார்கள் என்று எண்ணாமல் குறைந்தபட்சம் நாம் பயன்படுத்தும் பல்வேறு கடவுச் சொற்களை அவ்வப்போது மாற்றியும் இந்த இணைய குற்றங்களை பற்றிய குறைந்தபட்ச அறிவைத் தெரிந்து கொள்வதன் மூலமும் இது போன்ற பண மோசடியிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

காலைக்கதிர் Kalaikkathir

# சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம்; சீல் வைப்பு

யாழில் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் உணவு கையாளும் நிலையமொன்று அரக்கு முத்திரை (சீல்) வைத்து மூடப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபைக்குட்பட்ட யாழ் நகர் 2 பகுதி பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் தி. கிருபன் மற்றும் கு.பத்மகுமார் ஷதலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் கடந்த மாதம் 26 ஆம் திகதி உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குறித்த, பரிசோதனையின் போது பொது சுகாதார பரிசோதகர் வழங்கிய அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பிரபல உணவகம் இனங்காணப்பட்டது.

மேற்படி,உணவுகையாளும்நிலையத்திற்கு எதிராக மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர் கு.பத்மகுமாரினால் யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வழக்கை அன்றே விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிவான் எஸ்.லெனின்குமார், குறித்த உணவு கையாளும் நிலையத்தின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதிற்கு இனங்க ரூபா 90000 தண்டப்பணம் அறவிட்டதுடன் அனைத்து குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை அரக்கு முத்திரை வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகர்களிற்கு கட்டளை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் குறித்த உணவு கையாளும் நிலையம் அரக்கு முத்திரை வைத்து மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். சாவகச்சேரியில் வாகன விபத்து: வைத்தியர் உட்பட இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி வைத்தியர் ஒருவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தானது சாவகச்சேரி - நுணாவில் ஏ -9 வீதியில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருகையில் - வைத்தியர் பயணித்த காரும், பொதுமகன் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் ஏ-9 வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், விபத்து குறித்து சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# நட்சத்திர ஹோட்டலில் பாலியல் துஷ்பிரயோகம் கோடீஸ்வர வர்த்தகருக்கு வெளிநாடு செல்ல தடை

## கோட்டை நீதிவான் அதிரடி

பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சந்தேகிக்கப்படும் கோடீஸ்வரவர்த்தகர்ஒருவருக்குவெளிநாட்டுபயணத்தடையை விதித்து கோட்டை நீதிவான் கோசல சேனாதீர உத்தரவிட்டுள்ளார்.

வர்த்தகவிவகாரங்களைஆராய்வதற்காககடந்தமேமாதம் 7ஆம் திகதி கொள்ளுப்பிட்டி நட்சத்திர ஹோட்டலுக்கு சென்ற ஒருவரைஇந்தவர்த்தகர்பாலியல்துஷ்பிரயோகம்செய்துள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,பொலிஸாரால்நீதிமன்றில்முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சந்தேக நபரான வர்த்தகருக்கு பயணத் தடை விதிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபரான வர்த்தகர் நீதிமன்ற உத்தரவை மீறி நாட்டை விட்டு வெளியேறினால் அவரை உடனடியாக கைது செய்யுமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(05)

# தலங்கமவில் வீதியால் பயணித்துள்ள பொதுமக்கள் மீது வாளால் தாக்குதல்



வாளுடன் வீதிக்குச் சென்ற நபரொருவர் வீதியில் பயணித்த பொதுமக்களை தாக்கிய சம்பவம் தலங்கமை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்ஞாயிற்றுக்கிழமைஇரவுஇடம்பெற்றுள்ளது.

இவர்குடிபோதையில்இருந்துள்ளார்எனவும்இதன்போது வீதியிலிருந்த 4 வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# பிரதேச முயற்சியாண்மை பற்றி கற்பிட்டியில் கலந்துரையாடல்





(எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச அபிவிருத்தி உத்தி யோகத் தர் களுக்கான சிறு மற்றும் நடுத்தர மகளீர் முயற்சியாண்மைஉடையவர்கள் தெரிவு செய்து வியா பாரத் துறையை மேம்படுத்தும் வேலைத் திட்டம் சம்பந்துமான கலந்துரையாடல் நேற்று (செவ்வாய்க்கிழமை) கற்பிட்டி பிரதேச செயலக உதவித்திட்டமிடல்பணிப்பாளர் ஐ.எல். நிசாந்த் தேசப்பிரிய தலைமையில் கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி வேலைத்திட்டம் பற்றிய தெளிவூட்டலை கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் றஞ்சன யூ.கே பியதாச வழங்கியதுடன் இதற்கான நிதி மற்றும் முகாமைத்துவ சேவைகள் யூ.என்.டி.பீ. நிறுவனத்தின் மூலமாக வழங்கப்படும் எனவும் இவ் வேலைத்திட்டம் பற்றி மக்களுக்கு முழுமையான தெளிவூட்டல்கள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய ஊடகங்கள் வாயிலாகத் தெளிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக விரிவுரையாளர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை அடுத்த மாதம் அளவில் நடைமுறைப் படுத்துவ தற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் அதற்குரிய தகவல்கள் திரட்டும் செயற்பாடுகளுக்கு இப்பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் முழுமையான ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

(05)

# வீரமுனைக் கோபுரம் அமைப்பு சம்பந்தமாக உயர்மட்டகூட்டம்





(தில்சாத் பர்வீஸ்)

வீரமுனை ஆண்டியடிச் சந்தி கோபுரம் அமைப்பது சம்பந்தமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலாளர் தலைமையில்



சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை ஒருங்கிணைத்து அவர்களின் கருத்துக்களை தனக்கு அறிவிக்குமாறு பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைவாக நேற்று (செவ்வாய்க் கிழமை)சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் உயர்மட்ட



கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசனத்திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச சபை, நில அளவைத் திணைக்களம், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவகர்கள் உட்பட அதன் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

கோபுரம் அமைப்பது சம்பந்தமாக தனக்கு சாத்தியவள அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## நிச்சயமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான இரண்டு அத்தியாவசிய விடயங்களை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம்.

இலங்கையில் இந்தக் கடனை மறுசீரமைப்பது குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் உள்ளது. ஆனால் இந்த நாட்டில் உள்ள சில தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நற்செய்தியாகப் பார்க்க மறுக்கின்றன.

இது, ஒரு நாடு என்ற வகையில் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்பதைக் கூற வேண்டும். இது தொடர்பான புரிதல் இல்லாத காரணத்தால் தான் நாம் செய்த பணிகள் குறித்து சில தரப்பினர் இவ்வாறு கூறுகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால், அந்த கருத்துகள் குறுகிய அரசியல் நோக்கங்களால் கூறப்பட்டவை என்பது இப்போது தெளிவாகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, அப்போது எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் அது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனவே அரசியலையும் பொருளாதாரத்தையும் கலந்து நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பவர்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். கானா, ஈக்வடார், ஆர்ஜென்டினா போன்ற நாடுகளின் நிலைமை குறித்து சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கும் நடுத்தர வருமான நாடுகளுக்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பில் உள்ள வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நடுத்தர வருமானம் கொண்ட நாடான நம் நாட்டில் கடன் மறுசீரமைப்பு என்பது குறைந்த வருமானம் கொண்ட நாட்டின் கடன் மறுசீரமைப்பை விட சிக்கலானது.

ஆனால் நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த கடன் மறுசீரமைப்பில் இலங்கை முன்னணியில் உள்ளது. மேலும், கடன் மறுசீரமைப்பின் 03 முக்கிய விடயங்களை செயற்பாட்டின் ஊடாக நிரூபிக்க நாம் தயாராக உள்ளோம்.

அதன்படி, எங்களின் கடன் வழங்குநர்கள் கடனை செலுத்த 2024 முதல் 2027 வரை அவகாசம் அளித்துள்ளனர். அந்தக் காலப்பகுதியில் எமக்குக் கிடைக்கும் சுமார் 05 பில்லியன் டொலர்களின் நன்மையை, நாட்டு மக்களின் நலனுக்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2032ஆம் ஆண்டுக்குள், அரச கடன் தொகை மொத்தத் தேசிய உற்பத்தியில் 95சதவீதம் வரைக் குறைக்கப்பட வேண்டும். 2027 மற்றும் 2032 காலக்கட்டத்தில் மொத்த நிதித் தேவை 13சதவீதம் வரைக் குறைக்கப்பட வேண்டும். 2027-2032 காலகட்டத்தில் வெளிநாட்டுக் கடன் சேவையும் 4.5சதவீதம் வரைக் குறைக்கப்பட வேண்டும்.

இந்த 03 இலக்குகளை நிறைவு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கடன் மறுசீரமைப்புக்கு நாம் இப்போது உடன்பட்டுள்ளோம். அதன்படி, இந்த நாட்டிற்கான கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்காக நிலவிய அனைத்து நிச்சயமற்ற தன்மையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையில் பணவீக்கம் 70சதவீதத்தில் இலிருந்து 1.7சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. நாட்டின் திறைசேரி உண்டியல் ஏலத்தில், ஓராண்டு திறைசேரி உண்டியல்களின் வட்டி விகிதம் 10சதவீதத்தைஎட்டியுள்ளதுஎன்றார்.

## செய்ய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கினோம். அதன் பிறகு, முன்னேற்றம் குறித்து விளக்கினோம்.

2022ஆம் ஆண்டு கடன் செலுத்த முடியாத நாட்டிற்கு, மீண்டும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சவாலான பயணத்தில் இன்னுமொரு முக்கியமான மைல்கல்லை எட்டுவதற்கு எம்மால் முடிந்தது. கடந்த ஜூன் 26 எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் மீண்டும் கடனைச் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முடிந்தது.

அமைச்சரவையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணக்கப்பாடுகளிலும், ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டனர். அன்றிரவு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்களுக்கு இது குறித்து அறிவித்தேன்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் சவால் மிக்க பயணத்தின் ஆரம்ப நாள் முதல் நான் இதுகுறித்து அவ்வப்போது நாடாளுமன்றத்தில் தகவல்களை முன்வைத்தேன். முதலில் நாம் பின்பற்றும் திட்டங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்தினோம். அதன் பின்னர் நாம் பெற்றுக்கொண்ட முன்னேற்றங்கள் குறித்த தகவல்களை முன்வைத்தோம்.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்ட பின்னர், எமது நான்கு அம்சக் கொள்கைகளை நான் நாடாளுமன்றத்தில் முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,

2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான லாஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,

3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,

4. இத்திட்டத்தின் மூலம் 2048ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

அதிலிருந்து நாம் கடினமான, கஷ்டமான பயணத்தை ஆரம்பித்தோம். அந்தப் பயணமே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை நாம் அறிந்திருந்தோம். படிப்படியாக நாம் முன்னேறிச் சென்றோம். 2023 - 2024 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அந்த வேலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தினோம்.

2023 மார்ச் மாதத்தில் ஐ.எம்.எப். நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாடுகளை எட்டினோம். அதன் முதல் தவணைக் கொடுப்பனவை 2023 மார்ச் 20 பெற்றுக்கொண்டோம். நாம் அடைந்திருந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்த பின்னர், இரண்டாம் தவணையை 2023 டிசம்பர் 12 மற்றும் மூன்றாம் தவணையை 2024 ஜூன் 12 பெற்றுக்கொண்டோம்.

ஐ.எம்.எப். வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், கடன் மறுசீரமைப்பிற்கான பேச்சுக்களை நாம் ஆரம்பித்தோம். இந்தப் பணிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக லஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை தொடர்ந்து பெற்றோம்.

எமது வெளிநாட்டு கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இருதரப்பு கடன், 11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்பு கடன், 14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன், 12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை.

கடனை வெட்டிவிடுதல், கடன் சலுகைக் காலம், கடனை மீளச் செலுத்தும் கால அவகாசத்தை நீடித்தல் உள்ளடங்களான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும், வெளியிலும் பலதரப்பினர், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவற்றில் சில விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. சில விடயங்களில் பாதி உண்மையே இருந்தது. அதனால் கடன் மறுசீரமைப்பு குறித்த விடயங்களில் சர்வதேச நடைமுறைகளையும், உண்மைகளையும் நான் இந்தத் தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் என்றால் என்ன? வெளிநாடுகள் கடன்களை வழங்க எங்கிருந்து பணத்தைப் பெறுகின்றன? அந்தந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தையும், சேமிப்புக்களையுமே எமது கடனாக வழங்குகின்றனர். ஆனால் எமது நாட்டில் எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யாமல் கடன் சலுகைகளைப் பெற வேண்டும் என்று யோசனை முன்வைக்கின்றனர்.

அவ்வாறு நடக்காது. இது நடைமுறைச் சாத்தியமற்றது. சர்வதேச நடைமுறைகளுக்கமைய அவ்வாறு செய்ய முடியாது. மக்களின் வரிப் பணத்தைப் போலவே, அவர்களின் சேமிப்புக்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் போது, எங்களுக்கும் சில அர்ப்பணிப்புக்களைச் செய்ய நேரிடும். நாம் இதற்காக அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால், அந்நாட்டு மக்கள் எங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்ய முன்வர மாட்டார்கள்.

அதுமட்டுமன்றி, கடன் மறுசீரமைப்பு என்பது மிகக் கடினமான பணி. இந்தப் பணி கடினமானது மற்றும் வேதனையானது என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். கடன் வழங்குநர்களுக்கும், கடனாளிகளுக்கும், நாட்டு மக்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும், இந்தப் பணி கடினமானது. உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்கள், அடிப்படை கடன் தொகையைக் குறைக்கமாட்டார்கள். எமக்கு சலுகைகளை மட்டுமே பெற முடியும். கடன் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொள்வது, கடன் சலுகைக் காலம், வட்டி வீதத்தைக் குறைப்பது ஆகிய விடயங்களில் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த யதார்த்தைப் புரிந்துகொள்ளாமல், சிலர் அடிப்படை கடன் தொகையைக் குறைப்பது குறித்து இலங்கை ஆளும் தரப்பு கோரிக்கை முன்வைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இன்னும் சிலர் தாம் அதிகாரத்திற்கு வந்தபின்னர் அடிப்படைக் கடன் தொகையில் 50 வீதத்தைக் குறைத்துக் கொள்வதற்கு கடன் வழங்கியுள்ள நாடுகளுடன் பேச்சு நடத்துவதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறான பணியைச் செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கம் காண்பது அவசியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சொல்வதை மட்டும் கடன் வழங்குநர்கள் செய்யமாட்டார்கள் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச பொருளாதார வழிமுறைகள் குறித்து இவர்களுக்கு எந்தப் புரிதலும் இல்லை என்பதே இவ்வாறான கருத்துக்களின் மூலம் தெரிகிறது.

கடன் மறுசீரமைப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் கடன் வழங்குநருக்கோ, கடன் பெறுநருக்கோ இல்லை. இதுகுறித்த தீர்மானத்தை ஐ.எம்.எப். நிறுவனமே எடுக்கும். நாட்டில் கடன் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்குத் தேவையான மறுசீரமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அந்த நிறுவனமே தீர்மானிக்கும். அந்தந்த நாடுகளின் பொருளாதார பலம் குறித்து சுயாதீன மதிப்பீட்டின் பின்னர் அந்தத் தீர்மானத்தை எடுப்பார்கள்.

எமது நாட்டில் கடன் ஸ்திரத் தன்மை இல்லை என்று ஐ.எம்.எப். நிறுவனம் 2022ஆம் ஆண்டு நாம் கஷ்டத்தில் விழுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எங்களுக்கு அறிவித்திருந்தது. அதேபோல் ஐ.எம்.எப். நிறுவனம் பின்பற்றும் நடைமுறை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. குறைந்த வருமானம் பெறும் நாடுக் தொடர்பில் ஒரு நடைமுறையைப் பின்பற்றுகின்றனர்.

நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தொடர்பில் வேறொரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இது குறித்து ஒரு உதாரணத்தை முன்வைக்கிறேன். இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலில் வருகிறது. நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ள புதிய கடன் ஸ்திரத்தன்மை விசேட வரையறைகளைப் பயன்படுத்தி கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கைக்காக அவர்கள் முன்வைத்த செயல்திட்டத்திற்கமைய 2032 ஆண்டு அரச கடன் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதத்தையும்விட குறைத்திட வேண்டும். குறைந்த வருமானம் பெறும் நாடான கானாவிற்கு இதற்கு மாறான வேலைத் திட்டத்தையே முன்வைத்திருந்தனர்.

இந்த வேலைத்திட்டத்திற்கமைய 2028ஆம் ஆண்டில் அவர்களின் அரச கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 55 வீதத்தைவிட குறைவானதாக இருக்கவேண்டும். கானாவும் இலங்கையைப் போன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அந்நாட்டு ஜனாதிபதியும் நானும் இது குறித்து அடிக்கடி பேசிவந்துள்ளோம். ஆனால் கானா என்பது குறைந்த வருமானம் பெறும் நாடாகும். எனினும், எமது இரு நாடுகளுக்கும் பொதுவான சில விடயங்களும் இருந்தன. சில விடயங்கள் மாறுபட்டிருந்தன. ஆனால் இரு நாடுகளுக்கும் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச்செல்ல முடிந்துள்ளது.

இந்தப் பின்னணியில், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் பரிஸ் கழகம், இந்தியா மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனும் தனித்தனியாக பேச்சு நடத்த வேண்டியிருந்தது. எனினும், இதில் எந்தவொரு தரப்பினருக்கும் சிறப்பிடம் கொடுப்பதற்கு எமக்கு அனுமதியிருக்கவில்லை. இந்த இரு தரப்பினரையும் சமமாக நடத்தும் பொது நிபந்தனைகளை தயாரிப்பதே எமக்கிருந்து பெரும் சவாலாகும்.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பூகோள அரசியல் முன்னேற்றங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த இந்த சிக்கலான சவாலை சந்தித்தோம். இதனால் எமது இலக்குகளை நோக்கிப் பயணிப்பது இலகுவானதாக அமையவில்லை. பொம்மலாட்டத்தையும் முகக் கவச நடனத்தையும் ஒன்றாக ஆடுவதைப்போல இதுமிகவும் சிக்கலான பணியாக இருந்தது. இது செய்ய முடியாத பணியாகும். இருந்தாலும் நாம் செய்து முடித்தோம். எனினும், இந்த அனைத்து கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஐ.எம்.எப். வேலைத் திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற் குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்தது.

இந்த குறுகிய காலத்திற்குள் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் பட்டியலில் நாம் முன்னணி வகிக்கிறோம். இது மிகப் பெரிய வெற்றியாகும். இது நற்செய்தியாகும்.

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ், இணைத் தலைமைத்துவம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீன எக்ஸிம் வங்கி ஆகிய தரப்புக்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து நான் நாடாளுமன்றத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடிப்படைக் கடனை மீளச் செலுத்துவதற்காக 2028ஆம் ஆண்டுவரை கால அவகாசம் எங்களுக்கு கிடைத்துள்ளது. வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வட்டிவீதம் 2.1 அல்லது அதற்கு குறைந்தளவில் தக்கவைத்துக் கொள்ள அனுமதி கிடைக்கும்.

கடனை முழுமையாக செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043ஆம் ஆண்டுவரை அவகாசம் கிடைத்துள்ளது.

கடன் சேவை காலத்தை நீடித்துக் கொள்வதுடன் அடிப்படைக் கடனை மீளச் செலுத்தும் தொகையை தொடர்ந்து அதிகரிக்க முடியும். இதன் பலனாக வட்டியாக செலுத்த வேண்டிய 5 பில்லியன் டொலர்களை சேமித்துக் கொள்ள முடியும்.

எனவே, பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அந்நியச் செலாவணியை அதிகரித்துகொள்ள வேண்டும். அரச அடிப்படை நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் கடனை மீளச் செலுத்தும் இயலுமையை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இவற்றின் ஊடாக எதிர்காலத்தில் வலுவான நிலையில் இருந்து கடன் செலுத்துவதற்கான வாய்ப்பு கிட்டும்.

2023ஆம் ஆண்டு எமது உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தோம். இதன்போது நாம் மிகவும் கவனமாக செயல்பட்டோம். எமது நாட்டின் நிதி நிறுவனங்கள் பலனவீனமடையாத வகையிலும், அந்தந்த நிறுவனங்களுக்கு, நெருக்கடி ஏற்படாத வகையிலும், வைப்பாளர்கள் நெருக்கடிகளைச் சந்திக்காத வகையிலும் உள்நாட்டு மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுத்தோம்.

தற்போது நாம் 10 பில்லியன் டொலர் உள்நாட்டு இரு தரப்புக் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம். கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச பிரகடனங்களுக்கமைய பல்தரப்பு கடன்கள் இந்த வேலைத் திட்டத்திற்குள் உள்ளடங்காது. உண்மையில் பல்தரப்பு கடன்களை எந்த இடத்திலும் குறைத்துக்கொள்ள முடியாது. இவை ஐ.எம்.எப், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட கடன்களாகும்.

அடுத்தகட்டமாக 14.7 பில்லியன் அமெரிக்க டொலர் வணிகக் கடன்களை மறுசீரமைக்க வேண்டியுள்ளது. அதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில நாட்களில் அந்தப் பணிகளை நிறைவுசெய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம். அதன்பின்னர் எமது கடன் மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்கள் பாராளுமன்ற அரச நிதிசெயற்குழுவில் சமர்ப்பிக்கப்படும்.

முன்னதாக இரண்டு ஒப்பந்தங்களை மட்டும் நிதி செயற்குழுவில் சமர்ப்பிக்க எதிர்பார்திருந்தோம். ஆனால், தற்போது தனியார் பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. ஆனால், பிரான்சில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் ஒன்று நடப்பதால் இதனை சில நாட்களுக்கு பிற்போடுமாறு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கோரியுள்ளனர். இதற்கு நான் இணக்கம் தெரிவித்துள்ளேன். எனினும், இதனால் எமக்கு பாதிப்பு ஏற்படாது. கானாவும், இலங்கையும் இவற்றில் கையெழுத்திட்டுள்ளன. இதுபற்றிய தெளிவுபடுத்தல்களுக்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்க வேண்டும். அதேபோல் பிரான்சின் புதிய அரசாங்கத்துடன் பேச வேண்டிய இன்னும் பல விடயங்கள் இருக்கக்கூடும். பின்னர் இதுகுறித்து ஆழமாகவும், விரிவாகவும் ஆராயுமாறு நிதி தொடர்பான குழுவிடம் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுடன் இதுகுறித்து

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## செய்ய....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியிருக்கிறேன். இந்த தகவல்கள் அனைத்தையும் சேர்த்துக்கொண்டு இதுகுறித்து ஆழமான, விரிவாக ஆராயுமாறு கேட்டுக் கொள்கிறேன். இது எமது எதிர்காலம் தொடர்பானது. எனவே அனைவரும் இதுகுறித்து ஆராய வேண்டும்.

இது வரையில் நாம் சரியான பாதையில் பயணித்ததால் குறுகிய காலத்தில் இவ்வாறான முன்னேற்றத்தை அடைய முடிந்தது. தற்போது நாம் அடைந்துள்ள சாத்தியமான பெறுபேறுகளினால் நாட்டிற்கு கிடைக்கும் பலன்கள் குறித்தும் பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கடன் செலுத்தும் இயலுமை இல்லை என 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு வெளிநாடும் எமக்கு கடன் வழங்க முன்வரவில்லை. அவ்வாறான பின்னணியில் அவர்களால் சட்டபூர்வமாக கடன் வழங்கவும் முடியாது. இந்தக் காலப்பகுதியில் நட்பு நாடுகள் என்ற வகையில், இந்தியாவும், பங்களாதேசும் குறுகிய கால கடன் உதவிகளை வழங்கின.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் பல வழிகளில் சலுகைக் கடன்களைப் பெற்றுத் தந்தன. அதுதவிர வேறெந்த நாட்டிற்கும் நீண்ட கால கடன்களை வழங்க முடியாத நிலை இருந்தது. சில அரசியல் குழுக்கள் எமது வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பி வருகின்றன.

அநுரகுமார திஸாநாயக்க எம்.பியின் ஆதரவாளர்களின் பதிவொன்றைப் பார்த்தேன். 'நற்செய்தி. கிழவன் நாட்டைப் பொறுப்பேற்கும்போது வெளிநாட்டுக் கடன் 71 பில்லியன். தற்போது 100 பில்லியன் டொலர்' அநுரகுமார திஸாநாயக்க அவர்களுடன் நான் வாதப் பிரதிவாதங்கள் செய்திருக்கிறேன். முட்டி மோதியுள்ளேன். எனினும், அவரை இவ்வாறான கீழ்தரமாக விமர்சிக்கவில்லை. எனினும், அவரின் சில ஆதரவாளர்கள் அவரையும் சீரழிக்க முயற்சிக்கின்றனர். இந்தப் பதிவை மேற்கோள்காட்டியே அதுதொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துகிறேன்.

எமது மொத்த வெளிநாட்டுக் கடன் 37 பில்லியன் டொலர்களாகும். ஆனால், இது தொடர்பில் பதிவிட்ட நபர் 71 பில்லியன் டொலர்கள் என பொய்யான தகவலை குறிப்பிட்டுள்ளார். அதேபோல் கடந்த இரண்டு வருடங்களில் 100 பில்லியன் டொலர்கள் வரை கடன்களைப் பெற்றுக்கொண்டதாகவும் பதிவிட்டுள்ளார். ஆனால், கடனை திரும்பிச் செலுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு நாடும் எமக்கு கடன் வழங்கவில்லை என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எந்தவொரு நாட்டிற்கும் எமக்கு கடன் வழங்குவதற்கான சட்டபூர்வமான அனுமதி இருக்கவில்லை. இவ்வாறான பொய்களை சமூகமயப்படுத்துவதால் இவர்கள் எதனை எதிர்பார்க்கின்றனர்?

எந்தவொரு நாடும் எமக்கு கடன் வழங்கவில்லையெனில், நாம் எவ்வாறு கடன் பெற முடியும். நான் இங்கிலாந்து மத்திய வங்கியைக் கொள்ளையிடுவதா என்ற கேள்வியை இவர்களிடம் கேட்க விரும்புகிறேன். பதிவிட்ட அந்த நபர், என்னைவிட மத்திய வங்கியைக் கொள்ளையிட்டதில் அனுபவம் பெற்றிருக்கிறார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இரு தரப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு மீண்டும் உருவாகியுள்ளது. எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள், பெரிஸ் கழகம், சீன எக்ஸிம் வங்கி ஆகிய தரப்பினரிடம் இருந்து மீண்டும் கடன் பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

அதேபோல், வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மீள ஆரம்பிக்கவும் முடியும். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது நாடு என பெயரிடப்பட்டதாலும் அந்தந்த நாடுகள் நிதி வழங்கியதை இடைநிறுத்தியதாலும் எமது அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன. விசேடமாக கட்டுமானப் பணிகள் அனைத்தையும் மீள ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

இது கட்டுமானத்துறையில் மிகப் பெரிய பாய்ச்சலாகும். அதனால் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு கிட்டும். தற்போது கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளையும் நிறைவுசெய்ய முடியும். வெளிநாட்டு வேலைத் திட்டங்கள் இடைநடுவில் நின்றுபோனதால், எமது பொருளாதார வளர்ச்சி குறைந்தது. ஆனால் தற்போது நாம் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளோம். மீண்டும் உலக நாடுகளின் நிதியுதவியுடன் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது அபிவிருத்திகளை மேலும் துரிதப்படுத்த முடியும்.

வெளிநாட்டு கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள் தொடர்பாக சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றினால் தனியாக இயங்க முடியாது. தனியாக இயங்கும் வகையில் வருமானத்தை நாம் ஈட்டவும் இல்லை.

அதனால், நாம் கடன்களையும், நிவாரணங்களையும் பெற்றுக் கொள்ள நேரிடும். ஆனால் நாளாந்தம் உணவுத் தேவைக்காகவும், சம்பளம் வழங்கவும் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. சுதந்திரத்தின் பின் எமது நாடு செய்த பெரும் பிழை இதுவாகும்.

சம்பளத்தை அதிகரிக்க கடன்களைப் பயன்படுத்தினோம். அரச தொழில் வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். இலவசமாக உணவுகளை வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். உணவு, எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை குறைந்த செலவில் வழங்குவதற்காகவும் கடன்களைப் பயன்படுத்தினோம். அரச சேவைகளின் நட்டத்தை ஈடுசெய்ய கடன்களைப் பயன்படுத்தினோம்.

இவை எதனையும் செய்யாமல் எம்மால் அஸ்வெசும நிவாரணம் வழங்க முடிந்தது. பயனாளிகளை அதிகரிக்க முடிந்தது. தலா 10 கிலோ அரிசியை இரண்டு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. வீட்டுரிமையை வழங்க முடிந்தது. காணி உறுதிகளை வழங்க முடிந்தது. வெளிநாட்டு கடன் பெறாமல் இவை அனைத்தையும் நாம் செய்திருக்கிறோம்.

சில அரசியல் குழுக்கள், ஆட்சிக்கு வந்தவுடன் சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகின்றனர். வரியைக் குறைப்போம், சலுகைகளை வழங்குவோம் என்று ஆயிரக் கணக்கான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை எப்படி திரட்டப்போகிறார்கள் என்பது தொடர்பில் ஒருவார்த்தைக் கூட பேசுவதில்லை. ஆனால் நான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னர் பல அரசாங்கங்கள் செய்த தவறுகளை நிறுத்தினேன்.

அடுத்ததாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பின் காரணமாக, எமக்குக் கிடைத்த பலன்கள் குறித்து தெளிவுபடுத்த விரும்புகிறேன். 2022ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த மொத்தத் தேசிய உற்பத்தியில் 9.2 வீதத்தை செலவிட வேண்டியிருந்தது. 2027 முதல் 2032ஆம் ஆண்டுவரையில் அந்தத் தொகையை 4.5 வீதமாக குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டில் மொத்த நிதித் தேவை மொத்த தேசிய உற்பத்தியில் 34.4 வீதமாக இருந்தது. 2027ஆம் ஆண்டு முதல் 2032ஆம் ஆண்டு வரையில் இதனை 13 சதவீதமாக பேண வேண்டும். அதனால், அரச சேவைகளுக்காக பெருமளவு நிதியை ஒதுக்குவதற்கான வாய்ப்பு கிட்டும். அதேபோல் உள்நாட்டு வட்டி வீதத்தை மேலும் குறைக்க வாய்ப்பு கிட்டும்.

பாதாளத்தில் விழுந்து கிடந்த எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு ஆதரவளிக்குமாறு கட்சி, பேதமின்றி ஒத்துழைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தேன். நீண்டகாலமாக அரசியலில் எனக்கெதிராக செயல்பட்டவர்கள் கூட, நாட்டின் நலனுக்காக இந்தப் பணியில் என்னுடன் நேரடியாகவே கைக்கோர்த்துக் கொண்டனர். இன்னும் சிலர் அமைதியாக ஒத்துழைப்பு வழங்குகின்றனர். மற்றும் சிலர் தொடர்ச்சியாக இடையூறு செய்தனர். தொடர்ந்து விமர்சித்து வந்தனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது உடனடியாக ஐ.எம்.எப்.ஐ நாட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சியின் சில தரப்பினர் புறக்கணித்த போதும், தனியொரு எம்.பி.யாக அதில் பங்கேற்றேன். எனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்தேன். ஐ.எம்.எப். உதவிகளைப் பெறுவது மட்டுமே எமக்கான ஒரே வழியாகும் என்பதைக் கூறியிருந்தேன்.

அதிலிருந்து பல மாதங்களின் பின்னர் விழுந்து கிடந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப யாரும் முன்வராத சந்தர்ப்பத்தில் நான் இதனை ஏற்றுக்கொண்டேன். அந்த பாரதூரமான சவாலை எனது நாட்டுக்காகவே ஏற்றுக் கொண்டேன். இலங்கை அன்னையை ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து எவ்வாறாவது மீட்டு வருவேன் என சபதமெடுத்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அனைத்து மக்களும் இந்த வேலைத் திட்டத்திற்கு ஆதரவளித்தனர். அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஐ.எம்.எப். உடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். எம்மை விமர்சித்தவர்கள் ஒருபோதும் ஐ.எம்.எப். பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காது என்று கூறினர். ஆனால் இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தோம்.

அப்போது எம்மை விமர்சித்தவர்கள் தடத்தை மாற்றிக் கொண்டனர். ஐ.எம்.எப். ஒத்துழைப்புடன் முன்னேறிய எந்தவொரு நாடும் இல்லை என்று கூறினார்கள். தாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஐ.எம்.எப் இணக்கப்பாடுகளை புறக்கணிப்பதாக கூறுகின்றனர். ஆனால் நாம் வெற்றிகரமாக முன்நோக்கிச் சென்றோம். விமர்சகர்கள் மீண்டும் தடத்தை மாற்றிக் கொண்டனர்.

ஐ.எம்.எப். நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்று சிலர் சில அறிக்கைகளை மேற்கோள்காட்டி கூறிவந்தனர். எமது வேலைத்திட்டம் சாத்தியமற்றது என்றும் கூறினர். முதலாவது தவணை கிடைத்தாலும், இரண்டாவது தவணைக் கிடைக்காது என்று கூறினர். ஆனால் எமக்கு இரண்டாவது தவணையும் கிடைத்துவிட்டது. அப்போது மறுபடியும் விமர்சித்தவர்கள் தடத்தை மாற்றினர்.

ஐ.எம்.எப். நிபந்தனைகளில் சிலவற்றை பூர்த்தி செய்ய முடியாமல் போனதாக சில மதிப்பீட்டு நிறுவனங்கள் கூறியிருந்தன. அதனால் மூன்றாம் தவணையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறினர். முழு நாட்டையும் அச்சத்தில் ஆழ்த்த முயற்சித்தனர். எனினும், மூன்றாவது தவணையையும் நாம் பெற்றுக்கொண்டோம். விமர்சகர்கள் மீண்டும் தமது தடத்தை மாற்றிக் கொண்டனர்.

மூன்று தவணைகளைப் பெற்றாலும் கடன் மறுசீரமைப்பு ஒருபோதும் வெற்றியளிக்காது என்று கூறினர். அதுமட்டுமன்றி, மறுசீரமைக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டாம் என கடன் வழங்கிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சித்தனர். ஆனால் கடன் மறுசீரமைப்புப் பணிகளை நாம் வெற்றிகரமாக நிறைவுசெய்தோம். அப்போது மீண்டும் தடத்தை மாற்றிக் கொண்டார்கள்.

இப்போது கடன் தரப்படுத்தல்களில் இலங்கையின் நிலை மேம்படாமல் இருப்பதால் மறுசீரமைப்பில் பயனில்லை என்கின்றனர். அதனால் நாம் இப்போதும் வங்குரோத்து நாடு என்றும் கூறுகின்றனர். அதுபற்றியும் சில விடயங்களைக் கூற விரும்புகிறேன்.

2019ஆம் ஆண்டில் நாம் சர்வதேச தரப்படுத்தல்களில் டீ நிலையில் இருந்தோம். 2020ஆம் ஆண்டில் இலங்கை ஊ தரத்திற்கு பின்தள்ளப்பட்டது. கடன் செலுத்த முடியாது என்று அறிவிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இது நடந்தது. அதனால், தரப்படுத்தல்களுக்காக வேறு பல காரணங்களும் கருத்தில் கொள்ளப்படும் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

இப்போது நாம் பல வெற்றிகளைக் கண்டுள்ளோம். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம். வெளிநாட்டு இரு தரப்பு கடன் மறுசீரமைப்பை நிறைவுசெய்துள்ளோம். வணிகக் கடன்களை மறுசீரமைக்கும் பணிகளை விரைவில் பூர்த்தி செய்ய முடியும். அவற்றையும் விரைவில் நிறைவுசெய்ய முடியும். இதனால், எமது பொருளாதார குறிகாட்டிகள் உயர்வடையும். எமது பொருளாதாரக் குறிகாட்டிகளை மையப்படுத்திய உரிய நேரத்தில் கடன் தரப்படுத்தல்களை மேம்படுத்த சர்வதேச நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கும். அப்போதுதான் எமது விமர்சகர்கள் மீண்டும் தமது தடத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும்.

அரசாங்கத்திற்கும் விமர்சகர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் அரசாங்கத்திற்கும் வெட்டிப் பேச்சாளர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் வாய்ச்சவடால் பேர்வழிகளுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. நாம் நாட்டிற்காக சரியான கொள்கையுடன், சரியான பாதையில் பயணிக்கிறோம். அவர்கள் அதிகாரத்திற்காக நாளொன்றுக்கு ஒவ்வொன்றைக் கூறுகின்றனர்.

இதுகுறித்து கவனமாக அவதானிக்கும் தரப்பினரும் பாராளுமன்றத்தில் உள்ளனர். பல அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் இந்த விடயங்கள் குறித்து சுயாதீனமாகவும், கட்சி சாராமலும் கண்காணித்து வருகின்றனர். அவர்கள் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கட்சிக்காக அல்லது ஒரு தனிநபருக்காக செயல்படுவதா? அல்லது நாட்டிற்காக செயல்படுவதா? என்பது குறித்து கவனம் செலுத்துகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலை என்ன? அந்த நிலைமையை மறந்துவிட முடியுமா? பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, சமூக, அரசியல் ரீதியாகவும் அந்த நிலைமை மாறி கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி வந்தபோது பலர் அதிருப்தியடைந்ததைக் காண முடிந்தது. மண்ணெண்ணெய்பட்ட சாரைப் பாம்பைப் போல நடந்து கொண்டனர். சமூக வலைத்தள மொழியில் கூறுவதாயின், உடம்பில் கம்பளி பூச்சு ஊர்ந்து செல்வது போல் இருந்தது. ஏன் அது?

ஐ.எம்.எப் வேலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா? எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசைகளில் பல நாட்கள் இனி மேல் காத்திருக்க வேண்டியிருக்காது என்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

30 சதவீதத்திற்கும் மேலாக இருந்த வங்கி வட்டி வீதம் 9 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா? 70 சதவீதத்திற்கும் மேலாகச் சென்ற பண வீக்கம் கடந்த மாத இறுதியில் 1.7 வரை குறைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா? தொடர்ச்சியாக 6 காலாண்டுகள் ஆட்டம்கண்ட எமது பொருளாதாரம், வளர ஆரம்பித்தது நற்செய்தியா? துயரச் செய்தியா?

2022ஆம் ஆண்டு மே மாதமளவில் அதளபாதளத்தில் வீழ்ந்து, வற்றிப் போயிருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு 5410 மில்லியன் டொலர்கள் வரை அதிகரித்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா? ரூபா வலுவடைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா? அடிப்படை வைப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

பணத்தை அச்சிடாமல், வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை நிவர்த்தி செய்வது நற்செய்தியா? துயரச் செய்தியா? வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலுக்கான நடைமுறைக் கணக்கில் உபரி ஏற்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா?

காலிமுகத்திடல் மைதானத்தில் அடி வாங்காமல் செல்ல, சுதந்திரம் இல்லாதிருந்த கட்சித் தலைவர்களுக்கு, நாட்டின் தெற்கில் இருந்து வடக்கு வரை சென்று வர முடிந்துள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

பாராளுமன்றத்திற்கு வருவது மட்டுமன்றி வீடுகளில் கூட இருக்க முடியாமல் இருந்த நாட்டில் எந்த சந்தேகமும் அச்சமும் இன்றி வாழக்கூடிய நிலை உருவானது நற்செய்தியா? துயரச் செய்தியா? நாடு நல்ல நிலையை அடைவது நற்செய்தியா? துயரச் செய்தியா?

இங்கிருந்து முன்னேறிச் செல்வதற்கு எமக்கிருக்கும் ஒரே வழி இதுவாகும். நற்செய்தியை எதிர்காலம் வரை கொண்டுசெல்வதற்கான ஒரே வழியும் இதுவாகும். கடந்த காலத்தில் நாம் பெற்ற வெற்றிகள் ஊடாக அது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொங்கு பாலத்தின் கஷ்டமான பயணத்தில் தொடர்ந்து செல்ல வேண்டியுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் திரும்பிவர முடியாது. மீண்டும் வேறு வழியில் திரும்பிச் செல்ல முற்பட்டால், ஓரிரு மாதங்களுக்குள் மீண்டும் வரி யுகத்திற்குச் செல்ல நேரிடும். மிகப் பெரிய ஆபத்திற்குள் நாடு தள்ளப்படும். 25- 30 வருடங்களுக்கு மீட்டெடுக்க முடியாத நிலைக்குள் நாடு தள்ளப்படும்.

ஹூனுவட்டயே கதையில் வரும் குருஷா, குழந்தையைத் தூக்கிக் கொண்டு தொங்கு பாலத்தைக் கடக்கத் தீர்மானித்தார். அந்த நேரத்தில் மாற்று வழிகள் இருக்கவில்லை. அப்போது குருஷாவின் அருகில் இருந்த ஒருவர், 'சாகப்போகிறாரா? அடிவாரம் தெரிகிறதா? பாதாள உலகத்தைப் போல் இருக்கிறது.' என்று கேட்டார்.

ஆனால் குருஷா, சவால்மிகு தீர்மானத்தை எடுத்தார். அவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு எப்படியாவது தொங்கு பாலத்தைக் கடந்தார். ஆனால் குருஷா தொங்கு பாலத்தில் இருந்து விழுந்துவிடுவார் என்று பலர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் இறுதியில் அவர், குழந்தையுடன் வெற்றிகரமாக பாலத்தைக் கடந்தார்.

'அவர் விழுவார் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்' என்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் கோபத்தோடு கூறினார். இவ்வாறு பிற்போக்கு சிந்தனைக் கொண்டவர்களும் சமூகத்தில் இருக்கின்றனர். நாட்டிற்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு நான் அவர்களிடம் கோருகிறேன்.

விழும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பவது குறித்து சிந்திப்போம். அதற்காக பாடுபடுவோம். நான் விரும்பும், விரும்பாத, என்னை மதிக்கும், மதிக்காத இந்த சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களிடமும் நாட்டைப் பற்றி சிந்தியுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அரசியல் அதிகாரத்திற்காகவோ, அரசியல் பிரசித்தத்திற்காகவோ நான் தீர்மானங்களை எடுப்பதில்லை. நாட்டிற்காகவும், இளைஞர்களின் எதிர்காலத்திற்காகவுமே நான் தீர்மானங்களை எடுக்கிறேன். கடந்த இரண்டு வருடங்கள் நான் அரசியல் செய்யவில்லை. அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக தீர்மானங்களை எடுக்கவில்லை.

இந்த பாராளுமன்றத்தில் என்னைப் போன்று நாட்டை நேசிக்கும் பலர் உள்ளனர். தமது தனிப்பட்ட தேவைகளைவிடவும், நாட்டின் நலன் குறித்து சிந்திக்கும் பலர் உள்ளனர். அவர்கள் அனைவரிடமும் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியுடன் இணைந்துகொள்ளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்த நற்பணியில் கைகோர்த்துக் கொள்ளுங்கள். அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்று மீண்டும் அழைக்கிறேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் - முஸ்லிம் உறவின் இணைப்புப் பாலம் மறைந்த அரசியல் ஆளுமை ஆர். சம்பந்தன்

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்

(கே எ ஹமீட்)

தமிழ் முஸ்லிம் உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை ஆர். சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், அன்னாரின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு -

நாட்டில் புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சகட்ட தீர்வை பெற்றுக் கொடுப்பதில் தனது வாழ் நாள்களில் அயராது ஈடுபட்ட அரசியல் ஆளுமையான சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தேன்.

தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து, தமிழரசுக் கட்சியின் ஊடாக நாடாளுமன்றத்தில் பிரவேசித்து, வெள;வேறு சந்தர்ப்பங்களில் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ,2001 ஆம் ஆண்டிலிருந்து அண்மைகாலம்வரைதமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவராகத்திகழ்ந்து,அது தோற்றம்பெற்றதிலிருந்து அதனைசிறப்பாகஇருந்துவழிநடத்தியஆளுமையாக ராஜவரோஜூயம் சம்பந்தன் ஐயா வரலாற்றில் இடம் பெறுகிறார்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகள் வழங்கி வந்த நிறைவேறாத வாக்குறுதிகளை மையப்படுத்தியதாக அவரது வாதங்கள் நாடாளுமன்றத்தின் உள்ளும், புறமும் ஆணித்தரமாகவும் ஆக்ரோஷமாகவும் ஓங்கி ஒலித்தமையால் அவர்களுக்கு சம்பந்தன் சிம்ம சொப்பனமாகத் தோற்றமளித்தார்.

தந்தைசெல்வாவின்காலத்தில்இருந்துமரபுரீதியாக பின்பற்றப்பட்டுவந்ததமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டம் பின்னர் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து திசை மாறிய போதிலும் கூட, அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுகளை தமிழர் தரப்புகளுக்கும்,சிறுபான்மையினருக்கும் ஏற்புடையதான விதத்தில் அவர்களுக்கு மத்தியில் கருத்தொருமைப்பாட்டைக் காண்பதில் சம்பந்தன் ஐயா நாட்டம் கொண்டிருந்தார்.

அத்துடன் இனப் பிரச்சினைத் தீர்வைப் பொறுத்தவரை அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றான வடக்கு கிழக்கு இணைப்பு அங்கு வாழும் முஸ்லிம்களின் இணக்கப்பாடு இன்றி சாத்தியமாகிவிடாது என்பதில் அவர் உறுதியாக இருந்திருக்கிறார். அதனை அவர் தனது பேச்சிலும் மூச்சிலும்அவ்வப்போதுவெளிப்படுத்தியுமுள்ளார்.தமிழ் முஸ்லிம் உறவின் ஆழ அகலங்களையும், ஏற்ற இறக்கங்களையும் அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார்.

1977 இல் இருந்து வெள;வேறு காலப்பகுதிகளில் திருகோணமலை மாவட்டத்தை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய சம்பந்தன்ஐயாபின்னர் 2000 ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இறுதி மூச்சு வரை தனது பங்களிப்பை உரிய முறையில் நல்கி, தமிழரசு கட்சி கடைபிடித்து வந்த கோட்பாடுகளுக்கு அமைய கனகச்சிதமாகவும் அச்சொட்டாகவும் பேணிப் பாதுகாத்து நிலை நிறுத்தி வந்தார்.

பிந்திய காலத்தில், முதிர்ந்த வயதில் உடல்நிலை தளர்ந்திருந்த போதிலும், சக்கர நாற்காலியில் அமர்ந்து நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த போதிலும், அவரது ஆக்ரோசமான பேச்சாற்றல் அருகியிருக்கவில்லை.

எல்லாவற்றிற்கும்மேலாகஅவரதுநினைவாற்றல் மெச்சத்தக்கதாக இருந்து வந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் அணுகப்பட்ட விதம் குறித்தும், அதன் ஒவ்வொரு படித்தளம் குறித்தும் சுட்டிக்காட்டி விலாவாரியாக அவற்றிற்கு விளக்கமளிக்கும் அளவுக்கு அவரது ஞாபக சக்தி இருந்திருக்கிறது.

நாட்டில் இக்கட்டான சூழ்நிலையில், மிகவும் முக்கியமான காலகட்டத்தில் அவரது இழப்பு நேர்ந்திருப்பது வருந்தத் தக்கதாயினும், அவருக்குச் செலுத்தக்கூடிய நன்றி கடன் இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்கள் உள்ளடங்கிய சிறுபான்மையினரும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுகள் எவற்றிலும் ஈடுபடும் போது குறைந்தபட்ச சேதாரங்களோடு அவசியமான விட்டுக்கொடுப்புகளை ஒவ்வொரு தரப்பும் செய்து நாட்டில் நிலையான சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு பாடுபடுவதாகும்.

அன்னாரின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும், திருகோணமலை மக்களுக்கும் தமிழரசுக்கட்சிக்கும்தமிழ்தேசியக்கூட்டமைப்பிற்கும், தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது.

(05)

# தமிழர்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பே சம்பந்தனின் மறைவு

## இராதாகிருஸ்ணன் எம்.பி இரங்கல்

தமிழ் தேசிய கூட்டமைப்பு சம்பந்தன் வழியில் சென்று தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன்தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவுக்கு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி குறிப்பிலேயே அவர் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியில் -

மூத்த தமிழ் தலைவர்களில் ஒருவரான முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும்திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் மறைவு நாட்டின் அனைத்துதமிழர்களுக்கும்ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் மிகவும் நிதானமாகவும் பொறுப்புடனும் தனது கொள்கையில் பிடிப்புடனும் செயற்பட்ட ஒரு மூத்த தலைவர் இரா.சம்பந்தன்.

அவருடைய அனுபவம் கல்வி ஞாபசக்தி என்பன ஏனையவர்களை வியக்கவைக்கும். தன்னுடைய அரசியல்அனுபவத்துடன்தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு சரியான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டவர்.

அவருடைய காலத்தில் அது நிறைவேறாமல் போனமையானது பெரும் துரதிஸ்டமே. எனவே அவருடைய வழியில் சென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

இரா.சம்பந்தன், மலையக மக்களுடன் மிகவும் நெருக்கமான ஓர் உறவை கொண்டிருந்ததுடன் மலையக மக்கள் மீது பெரும் மதிப்பை கொண்டிருந்தவர். இந்த தருணத்தில் மலையக மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலைதெரிவித்துக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# தமிழ் தேசியம் விலைபோகாமல் பாதுகாத்த தலைவர் சம்பந்தன்:

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அஞ்சலி



தமிழ் தேசிய அரசியலை கெடுபிடிகளுக்குள்ளிருந்து பாதுகாத்து, சர்வதேசமயப்படுத்திய மிகச்சிறந்த மிதவாத தலைவர் சம்பந்தன் ஐயா என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் மறைவையிட்டு அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

விடுதலை அரசியலில் சிறுபான்மைச் சமூகங்களை சமபார்வையுடன் நோக்கிய தலைவர் சம்பந்தன் ஐயா. நீண்டஅரசியல்வரலாற்றனுபவமுள்ள இவர், தமிழ் தேசிய அரசியலை மிகச்சாதுர்யமாக வழிநடத்தினார்.

ஜனநாயகத்தின்மீதுஅவருக்கிருந்த நம்பிக்கையால், கெடுபிடியான காலங்களில்கூட தமிழ்த்தேசிய அரசியல் விலைபோகாமல் பாதுகாக்கப்பட்டது. தொண்ணூறு வயதைக் கடந்திருந்தாலும் தீர்வைப் பெற வேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது.

ஒரே வாழிடத்தில் ஒரே மொழி பேசுவோராக வாழ்ந்த சிறுபான்மைச் சமூகங்களை, சம பார்வையில் நோக்கிய பெருந்தகையும் இவர்தான். தமிழ், முஸ்லிம் முரண்பாடுகள் ஒரு மொழித் தேசியத்தை (தமிழ்) சிதைக்கக் கூடாதென்பதற்காக முஸ்லிம் தலைமைகளுடன் நல்லுறவைப் பேணி வந்தார். இன்று வரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப்பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற தலைமைகளே அவசியம்.


காலஞ்சென்ற சம்பந்தன் ஐயாவின் கடந்தகால வரலாறுகளிலிருந்து ஒற்றுமைக்கான பல படிப்பினைகளை நான் காண்கிறேன். இவரது வழிகாட்டல்களில் சமாதானத்துக்கான கதவுகள் திறந்தேயிருந்தன. உரிமை அரசியல் விலைபோகக் கூடாது என்பதற்காக தனக்கு வந்த அரிய பல வாய்ப்புக்களையும் அவர் தியாகம் செய்திருந்தார்.

இனிவருங்காலங்களில் தென்னிலங்கை அரசியலில் ஏற்படப் போகும் மாற்றங்கள் மற்றும் தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு தீட்சண்யமான தலைமை தமிழருக்கு அவசியம். இந்தத் தலைமைகளுடன்தான் முஸ்லிம் தலைமைகளும் இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் ஆண்டவனின் அருட்கடாட்சம் கிடைக்கட்டும். - என்று குறிப்பிட்டுள்ளார்.(05)

# இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பு

## திருமலை எம்.பி. எம்.எஸ் தௌபீக் இரங்கல்



(எம். எப். றிபாஸ்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஐயாவின் மறைவு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி எம் அனைவருக்கும் பெருந்துயரினை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தன்னைமுழுமையாக அற்பணித்தவர் சம்பந்தன் ஐயா என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எமதுநாட்டில்தமிழ் சமூகம் எதிர்நோக்கிய இனரீதியான அதிகார ரீதியிலான பல்வேறு நெருக்கடிக்கடிகளின் போது இராஜதந்திர ரீதியாக பல்வேறுநகர்வுகளை மேற்கொண்டு அம்மக்களுக்கு முடியுமான அனைத்து தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தவர். தமிழ் - முஸ்லிம் அரசியல்தலைமைகள் ஒற்றுமையுடன் செயற்பட்டால்தான் சிறுபான்மைமக்களின் உரிமைகளைவென்றெடுக்கமுடியும்எனநிரூபித்துக் காட்டிய தலைவர் சம்பந்தன் ஐயா.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை முஸ்லிம்மக்கள்சார்பாகத்தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றுள்ளது(05)

காலைக்கதிர் Kalaikkathir

# வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டும் காலஞ்சென்ற இரா.சம்பந்தனுக்கு இரங்கல்



(எம் சியாஜ்)

தமிழரசுக்கட்சியின் தலைவரும் மூத்த தமிழ் அரசியல்வாதியுமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்கு மாத்திரமன்றி, நல்லிணக்கத்தை விரும்பும் அனைத்து இலங்கையர்களுக்கும் பேரிழப்பாகும் என்று வட மேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஆர்.சம்பந்தனின் மறைவு குறித்து வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் இரங்கல் செய்தியொன்றை விடுத்துள்ளார்.

மேற்படி இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

சட்டத்தரணியாக அரசியல் களத்திற்குள் நுழைந்த ஆர்.சம்பந்தன் ஐயா அவர்கள், 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து 1977 ஆம் ஆண்டு முதன்முதலாக பொதுத் தேர்தலில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தேசிய அரசியலில் காலடி எடுத்து வைத்தார். அக்காலப் பகுதியில் வடக்கு – கிழக்கு முஸ்லிம்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியுடன்இணைந்துஉரிமைக்கான அரசியல் போராட்டங்களை மேற்கொண்டிருந்த காலகட்டமாகும்.

அதன் பின்னர் பல்வேறு கட்டங்களைக் கடந்து தமிழ், முஸ்லிம்களுக்கான தனித்துவ அரசியல் களங்கள் செயற்பாட்டுக்கு வந்திருந்த நிலையிலும் மறைந்தபெருந்ததலைவர்எம்.எச்.எம்.அஷ்ரப்மற்றும் ஆர்.சம்பந்தன்போன்றவர்கள்நல்லிணக்கஅரசியல் மற்றும் ஒருங்கிணைந்த உரிமைப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டிருந்தனர்.

அதன் காரணமாகவே 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் 2015 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சராக நான் தெரிவு செய்யப்படுவதில் தமிழ்த் தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதில் ஆர்.சம்பந்தன் ஐயா பாரிய பங்களிப்பை வழங்கினார்.

தான் சார்ந்த தமிழ் மக்களின் நலன் சார்ந்து சதாவும்சிந்தித்துச்செயற்பட்டஓர்அரசியல்வாதியாவார். இலங்கையில் தமிழர் உரிமைப் போராட்டத்தின் மூன்றாம்கட்டமான2009ஆம்ஆண்டுக்குப்பிந்திய காலகட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை அரசியல் ரீதியாக வென்றெடுப்பதில் தேசிய மட்டத்தில் மாத்திரமன்றி சர்வதேச களங்களிலும் போராட்டங்களையும், வலியுறுத்தல்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தார்.

தனது வாழ்நாளுக்குள்ளாக தமிழர் அரசியல் உரிமைக்கான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதில் முனைப்புடன் செயற்பட்டவர். மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதிலும் தீவிர கரிசனையுடன் செயலாற்றியவர். கிழக்கின் முதலமைச்சராக இருந்து நான் மேற்கொண்ட அவ்வாறான போராட்டங்களின் போது பக்கபலமாக செயற்பட்டவர்.

தமிழர் அரசியல் வரலாற்றில் அமிர்தலிங்கம் ஐயாவின் பின்னர் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்பதவியைவகித்தபெருமைக்குரியவராகவும் சம்பந்தன் ஐயா அழியாத வரலாற்றுத்தடமொன்றை விட்டுச் சென்றுள்ளார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் நேர்மையான அரசியல்வாதிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். எந்தவொரு பிரச்சினை அல்லது முக்கியமான சந்தர்ப்பங்களிலும் அவரது நிலைப்பாடுகள் நேர்மையானதாகவே இருந்தது.

தமிழ்–முஸ்லிம் இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதிலும் அவரது பங்களிப்புகள் பாராட்டத் தக்கவையாகவும், நேர்மையானவையாகவும் இருந்தது. அது தொடர்பான பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். கிழக்கில்மட்டுமன்றிவடக்கிலும் இன்று தமிழ – முஸ்லிம் நல்லுறவு குறிப்பிடத்தக்க அளவில் மீள புத்துயிர் பெற்றிருப்பதற்கு அவரது நேர்மையான அணுகுமுறைகளும் ஒரு காரணம் என்று கூறலாம்.

இலங்கையின்சிறுபான்மைஅரசியல்வாதிகளில் சர்வதேசரீதியாக அறியப்பட்ட, சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒருசிலரில் சம்பந்த ஐயா முக்கியமானவர். இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் குரலாக சர்வதேசத்தில் அறியப்பட்டவர். அவரது கருத்துக்கள் எப்போதும் சர்வதேச ரீதியில் தாக்கம் ஏற்படுத்தும் வல்லமையைக் கொண்டிருந்தன.

அவ்வாறான ஓர் அரசியல் தலைவரின் இழப்பு இன்றைய காலகட்டத்தில் ஒரு பாரிய பேரிழப்பாகும்.

சம்பந்தன் ஐயாவின் எதிர்பார்ப்பின் பிரகாரம் உரிமை சார் அரசியல் போராட்டங்களில் கைகோர்த்துச் செயற்படுவதும், பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் நல்லிணக்க அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதுமே அன்னாருக்கு நாம் செய்யக்கூடிய உண்மையான அஞ்சலியாகும்.

அன்னாரின் மறைவு தொடர்பில் எனது ஆழ்ந்த இரங்கல்களைத்தெரிவித்துக்கொள்கின்றேன்என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.(05)

# இயக்கச்சி மதுபானசாலைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

இயக்கச்சியில் மதுபானசாலைக்கு எதிராக மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இயக்கச்சி சந்தியில் புதிதாக மதுபானசாலைஒன்றுஅமைக்கப்படவுள்ளதையடுத்து கிராம மக்கள் அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.00மணியளவில் இயக்கச்சி சந்தி ஏ09வீதி அருகே இடம்பெற்றிருந்தது.

மேலும் குறித்த மதுபான சாலை அமைய இருக்கும் இடத்திலிருந்து சுமார் 50மீற்றர் தொலைவில் பாடசாலை அமைந்துள்ளதாகவும் எதிரில் கோவில், இயக்கச்சி பொதுச்சந்தை என அதிகளவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்கூடுகின்றஇடமாகவுள்ளதாகவும்குறித்த இடத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்று உள்ளதெனவும் அதில் தூர பிரதேசங்களில் இருந்து வரும் பாடசாலை மாணவர்கள் பஸ்ஸுக்காக காத்திருக்கும் இடமாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த இடத்தில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கினால் பல குற்றச்செயல்கள் இடம்பெறும் எனவும் பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பும் கிடைக்கபெறாது எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தின் போது இயக்கச்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து கடைகளும் போராட்டத்தின் போது கதவடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் மற்றும் பளை பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பளை பிரதேச அமைப்பாளரிடமும் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.(05)

# ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தன்னாட்சி தமிழ் அரசு ஏற்பட இதய சுத்தியோடு ஒற்றுமையாக உழைப்போம்

## கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல்

ஆறு சகாப்தங்களுக்கு மேலாக ஓயாது ஒழியாது தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போரா டிவந்த சம்பந்தன் ஐயாவின் குரல் ஓய்ந்துவிட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவரது உடல்நலம் குறைந்து காணப்பட்டாலும் அவரது குரலில் தளர்ச்சி இருக்கவில்லை.

சம்பந்தன் ஐயா தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்களான தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோர் வழியில் அவர்கள் விட்டுச்சென்ற பணியைத்திறம்படச்செய்தவர். தமிழரசுக் கட்சியுடனான அவரது தொடர்பு 1961 ஆம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு தொடங்கியது. அவர் கைது செய்யப்பட்டு பனாக்கொடை தடுப்பு முகாமில் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரது முழுநேர அரசியல் நுழைவு 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக போட்டியிட்டு வென்றதன் வாயிலாகத் தொடங்கியது.

1983 கறுப்பு ஜூலையில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் தனி நாடு கோருவதை தடைசெய்தும் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின்கீழ்நாடாளுமன்றத்தில் உறுதிமொழிஎடுக்கமறுத்து அதன் அமர்வுகளை மூன்று மாதங்கள் தொடர்ந்து புறக்கணித்ததன் விளைவாக சம்பந்தன் ஐயா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்ரெம்பர் 7 இல் இழந்தார்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பங்குபற்றிய மூன்று முக்கிய தலைவர்களில் சம்பந்தன் ஐயாவும் ஒருவர்.

1987 இல் நிறைவேற்றப்பட்ட 13 ஏ சட்ட திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இராஜீவ் காந்திக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி 28 ஒக்ரோபர், 1987 ஒரு நீண்ட கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு.சிவசிதம்பரம், பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் மற்றும் துணைத் தலைவர் இரா.சம்பந்தன் கையெழுத்திட்டிருந்தனர்.

2015 செப்ரெம்பர் 3 முதல் 2018 டிசெம்பர்18 வரை இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் சம்பந்தன் ஐயா இருந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அவர், தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அடுத்து, தென்னிலங்கை அரசியல் தலைவர்களாலும் வெளிநாட்டு இராஜதந்திரிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்ட தமிழ்மக்களின் ஆளுமைமிக்க தலைவராக விளங்கினார்.

2009 மே 18 இல் போர்முடிந்த கையோடு பயங்கரவாதத்தை 'ஒழித்துக் கட்டிய' சிறிலங்கா அரசைப் பாராட்டி மே 27 இல் இந்தியா கொண்டுவரப்பட்ட தீர்மானம் 29 நாடுகள் ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டது. 2011 ஆம் ஆண்டுவரை ஐ.நா.ம.உ. பேரவை சிறிலங்கா அரசை ஆதரித்தே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் போக்கு 2011 ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதை மாற்றி அமைத்தவர் சம்பந்தன் ஐயா. அந்த ஆண்டு ஒக்ரோபர் மாதக்கடைசியில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்தூதுக்குழு ஒன்று சம்பந்தன் ஐயா தலைமையில் அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகளோடு இரண்டு நாள்கள் தொடர்ந்து பேச்சு நடத்தியது. அதன் பின்னரே 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா.ம.உ. பேரவையில் சிறிலங்கா அரசுக்கு எதிரான தீர்மானங்கள் அடுத்தடுத்து அமெரிக்காவாலும் அதன் நட்பு நாடுகளாலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக்கூறல்கள், மீள்நல்லிணக்க முயற்சிகள் இன்று பேசுபொருளாக மாறியுள்ளன. அந்தப் பெருமை சம்பந்தன் ஐயாவின் சாணக்கிய அரசியலையே சாரும்.

'முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால்நாட்டின்நன்மைகருதி - நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் நல்ல முடிவை எடுக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் வேட்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், வடக்கு - கிழக்கில் வரலாற்று ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில்அதியுச்சஅதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்' என்பன சம்பந்தன் ஐயாவின் பெருவிருப்பாக கடைசிவரை இருந்தன.

தமிழ்மக்கள் இழந்த அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க, இணைப்பாட்சி அரசியல்முறைமையின் கீழ் தமிழ்மக்களின் வராலாற்றுத் தாயக பூமியில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணைப்பாட்சி கட்டமைப்பின்கீழ் ஒருதன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

சம்பந்தன் ஐயாவின் பிரிவினால் வாடும் அவரது துணைவியார், மகன்கள், மகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். - என்றுள்ளது.(05)

## கிண்ணியா அலிகார் ம.வி. புத்தாண்டு கொண்டாட்டம்









(எச் எம் ஹலால்தீன் )

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தின் புத்தாண்டு கொண்டாட்டம் மாணவர்களால் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் சாலிகீன் அஹமத் ராஜியின் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பப் பிரிவு வளவாளர் ஜனாப்.கே. முனவ்வர்கான் மற்றும் பெண்கள் உதவி அமைப்பின் தலைவி எஸ்.நளீமா, மாகமாருமருத்துவமாது டபிள்யு.வாசனா உட்படபலர் கலந்து கொண்டனர்.

பெற்றோரின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு மாணவர்களின் மகிழ்ச்சியான நிகழ்வுகளுடன்நிறைவேறியது.(05)

## கொட்டகலையில் ஆணின் சடலம் மீட்பு

*(பி.கேதீஸ்)*

*தலவாக்கலை - ஹற்றன் பிரதானவீதியின்கொட்டகலை, ரொசிட்டா பிரதேசத்தில் வீதிக்கு அருகில் காணப்படும் ஆழமான கொங்கிரீட் வடிகான் ஒன்றிலிருந்து செவ்வாய்க்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக திம்புள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.*

*மீட்கப்பட்டுள்ள சடலம் ஆண்ஒருவருடையதுஎனவும், அவரதுஅடையாளம்இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஹற்றன் நீதிமன்றத்திற்கு இது தொடர்பில் அறிவித்துள்ள பொலிஸார் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*



# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கக்கோரி கவனவீர்ப்பு போராட்டம்



(ஹஸ்பர் ஏ.எச்).

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனம் வழங்கக்கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று (செவ்வாயக்கிழமை) திருகோணமலையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதனை திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. திருகோணமலை உட்துறை முக வீதியில் உள்ள கிழக்கு மாகாண சபை வீதியில் இருந்து கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை நடைபவணியாக பதாகைகளை ஏந்தியவாறு கடும் வெயிலில் பலர் குழந்தைகளுடன் நடந்து சென்றனர்.

பேச்சு போதும் இனி நியமனத்தை வழங்கு உள்ளிட்ட பலவாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு என்ற பிரதான வாசகம் ஊடான கோசங்களை இதன் போது எழுப்பினர்.

இதன்போது கிழக்கு ஆளுனர் செயலக முன்றிலில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஆளுநர் செயலகத்தில் மகஜரும் கையளித்தனர். இதில் நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.(05)

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு அன்னை முத்திரை வெளியீடு

மடு அன்னை அரசியாக முடிசூட்டப்பட்டதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு அன்னையின் திருவுருவம் பொறிக்கப்பட்ட முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை அன்ரனி ஞானப்பிரகாசத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்றுள்ளது.

தபால்மா அதிபர் ருவன்சத்குமாரவால் விசேட முத்திரை மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தபால் திணைக்கள அதிகாரிகள், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சத்துரி பிந்து மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மடு அன்னையின் ஆடிமாதத் திருவிழா நேற்று (செவ்வாய்க் கிழமை) ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.(05)

# 36 வருட கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் கரீம் முஹம்மது



(எச்எம்.ஹலால்தீன்)

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள் ஆசிரியர் பணி அறப்பணி அதற்கு நீ அர்ப்பணி என்று கூறுவார்கள் அந்தக் கொள்கையில் வழிவந்தவர் தான் இவ்வாசிரியர்.

தனது 36 ஆவது கல்விச் சேவை பணியிலிருந்து ஓய்வுபெறும் இவர் பலராலும் பாராட்டப்பட்டவர். தனது ஆசிரியர் சேவை பணி காலத்தில் அயராது உழைத்து சமூகத்துக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் பல கல்வியலாளர்களை உருவாக்கியவர்.

ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெறும் இவர் அப்துல் கரீம் நோனா உம்மா தம்பதிகளின் ஏழு பிள்ளைகளுள் கடைசியாக பிறந்தவர் அப்துல் கரீம் முஹம்மது சுபைர் ஆசிரியர்.

இவர் 1964 ஜூலை மாதம் நான்காம் திகதி பெரிய கிண்ணியாவில் பிறந்து தனது ஆரம்பக் கல்வியை பெரிய தின்னியா ஆண்கள் பாடசாலையில் காற்று தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை கிண்ணியா மத்திய கல்லூரியில் கலைத்துறையில் கற்று, 1984 ஆம் ஆண்டு உயர்தரப் பரிட்சையில் சித்தி அடைந்து 1985 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். கிண்ணியாவில்

அந்த ஆண்டு கலைத்துறையில் தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களில் இவரும் ஒருவர். மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சினையின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டு, 1991இல் தனது கலைமாணி பட்டத்தை பூர்த்தி செய்த இவர், 1995 ஆம் ஆண்டு பட்டபின் கல்வி டிப்ளமோ தொழிற் தகைமையும், 2010 ஆம் ஆண்டு அரசியல் பாடத் துறையில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1987 ஆம் ஆண்டு ஆசிரியர் போட்டி பரிட்சையில் சித்தி அடைந்து, 1988 மே மாதம் 19 ஆம் திகதி கந்தளாய் அல்தாரிக் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அங்கு மூன்று ஆண்டு காலம் சிறப்பாக கடமை புரிந்ததோடு மாலை நேரங்களில் உயர்தர பாடங்களைக் கற்பித்து பல மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பவும், ஏனைய தொழில்களைப் பெறவும் மேலும், அப்பாட சாலையில் உயர்தரம் ஆரம்பிக்கவும் பேருதவியாக இருந்தார்

1991 ஜூன் 23ஆம் தேதி கிண்ணியா அல் அக்சா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் 19 ஆண்டுகள் அக்கல்லூரியில் அரசியல் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பித்து வந்ததோடு, உயர்தர பிரிவு தலைவராகவும், 12 ஆண்டுகளாக பிரதி அதிபராகவும் கடமை புரிந்து, தனது அரசியல் விஞ்ஞான பாடத்துறையின் மூலம் அர்ப்பணிப்புள்ள ஒரு ஆசிரியராக இருந்து பல நூறு மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமை இவரை சாரும். பாடசாலை நிர்வாகம் சிறப்புற இவரது பங்காளிப்பு மகத்தானதாக இருந்தது.

கற்பித்தல் துறையில் மட்டுமின்றி மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் செயல்பட்டார். இவரின் வழிகாட்டலின் கீழ் பலர் சட்டத்தரணிகளாகவும், நீதிபதிகளாகவும், துறை சார்ந்த அதிகாரிகளாகவும், ஆசிரிய பெருந்தகைகளாகவும் கடமை புரிந்து வருகின்றனர். மேலும் உயர்தர பரிட்சையில் அரசியல் விஞ்ஞான பாடத்தில் திருமலை மாவட்டத்தில் முதன் முதலாக ஏ சித்தியை பலர் பெறுவதற்கும், தொடர்ந்து மாணவர்கள் ஏ சித்தி பெறவும் இவரது கற்பித்தல் நுட்பம் மூல காரணமாக அமைந்தது எனலாம்.

அரசியல் பாடத்துறையில் இவர் பெற்ற நிபுணத்துவம் வெளிவரியாகவும் பல பட்டதாரிகளை உருவாக்கியது. கிண்ணியா மட்டுமன்றி, திருகோணமலை, கந்தளாய், மூதூர் போன்ற பிரதேசங்களிலும் இவரது கற்பித்தல் வியாபித்திருந்தது. மேலே கூறிய பிரதேசங்களில் பாடசாலை மட்டங்களில் பல செயல் அமர்வுகளையும் நடத்தியுள்ளார் மேலும் பல அரசியல் நூல்களை வெளியிட்ட இவர் பல அரசியல் கட்டுரைகளையும், தினக்குரல் பத்திரிகைக்கு வழங்கியுள்ளார்.

1991 ஏப்ரல் 21 ஆம் தேதி காணிதின் சித்தி சீனா ஆசிரியை கரம்பிடித்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இவர் மாணவர்களுக்கும் தந்தை போன்றே செயல்பட்டார். இவரது மனைவியின் ஒத்துழைப்பும், ஆலோசனையும் ஆசிரியப் பணியை, அதிபர் பணியை செவ்வனே செய்வதற்கு உறுதுணையாக இருந்தது.

கிண்ணியா அல் அக்சா கல்லூரியில் 19 ஆண்டுகள் சேவை புரிந்த இவர் 2009 ஆம் ஆண்டு கிண்ணியா அல் ரவுலா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார். அங்கு மூன்று ஆண்டுகள் சேவை புரிந்த இவர், 2012 ஆம் ஆண்டு கிண்ணியா அல்மினா மகா வித்யாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். எட்டு வருடங்களாக இங்கு கடமை புரிந்து பல மாற்றங்களை ஏற்படுத்தினார். குறிப்பாக இரண்டு ஏக்கர் காணியை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்ததோடு விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டது மட்டுமன்றி மாடி கட்டிடம், ஆசிரியர்களுக்கான குவாட்டர்ஸ், பூங்கா, குடிநீர் வசதிகள் என்பனவும் இவரது காலத்தில் செய்யப்பட்டதாகும்.

பாடவிதான அபிவிருத்தியில் க. கொ.த. சாதாரண தர, உயர் தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு களை பெற்ற பாடசாலைகளில் இப்பாடசாலை யும் ஒன்றாக இருந்து வந்தது. பல மாணவ மாணவிகள் பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரி என்பவற்றுக்கு சென்ற மையும் இவரது காலத்தில் ஆகும். இத்தனைக்கும் இது ஒரு கிராமப்புற பாடசாலையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2020 ஆம் ஆண்டு கிண்ணியா அல். ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்யாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழிகாட்டியாக தொழில் பட்டார். மாணவிகளுக்கு ஊக்குவிப்பு செயற்பாடுகள் மூலம் கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்பவற்றில் பல திருப்பங்களை ஏற்படுத்த காரணமாக இருந்தார்.

2024 ஜூலை நான்காம் தேதி இவரது (ஆசிரிய, அதிபர்) 36 வருடங்கள் கல்வி சேவை காலம் நிறைவடைந்தாலும் அவரது சமூகப் பணி தொடர்கிறது.

தற்போது இவர் கிண்ணியா அல் ஜெசிரா அரபுக் கல்லூரியில் பாடசாலை பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து மாணவிகளின் கல்வி மேம்பாட்டுக்கு துணைபுரிந்து வருகின்றார். அத்தோடு பாடசாலைகளில் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி வரும் இவரது முயற்சிகள் வெற்றி பெற வல்ல இறைவன் துணை புரிவானாக. (05)

# மாகாண மட்ட ரபான் நடனதில் முஸ்லிம் பாடசாலைக்கு இடம்



(எம் சியாஜ்)

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய கலை கலாசார ரபான் நடன போட்டியில் கற்பிட்டி ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர் என பாடசாலையின் அதிபர் ஜனாப் சகூர் தெரிவித்துள்ளார்

இம் மாணவர்களை இணைந்து நெறிப்படுத்திய பாடசாலையின் ஆசிரியர் ஜனாப் ஹசன் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# அம்பலாங்கொடையில் கூரிய ஆயுதத்தால் தாக்கி மலர்சாலை உரிமையாளர் கொலை

அம்பலாங்கொடை, பலப்பிட்டிய பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மலர்சாலை உரிமையாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பலாங்கொடை, மல்வென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது தலையில் வெட்டுக் காயங்கள் பல காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் செவ்வாய்க்கிழமை இரவு தனது மலர்சாலையில் பணியாற்றும் ஊழியரொருவருடன் இணைந்து மலர்சாலை வாகனமொன்றில் தெல்வத்த பிரதேசத்தை நோக்கிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது இவர் மலர்சாலை வாகனத்தில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கிண்ணியா வலய அதிபர், ஆசிரியர் சம்பள உயர்வு கோரிப் போராட்டம்

## பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன

(எச் எம் ஹலால்தீன் )

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட முள்ளிபொத்தானை, குறிஞ்சாக்கேணி, கிண்ணியா கூட்டம் உட்பட அனைத்து பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் புதன், வியாழன் காலை முதல் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் பாடசாலைக்கு வந்த மாணவர்கள் பலர் மீண்டும் பாடசாலையை விட்டு வீட்டுக்கு திரும்பிச் செல்வதை காணக் கூடியதாக இருந்தது.

ஒரு சில மணி நேரத்துக்கு பின்னர் பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடி கிடந்ததோடு பல ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகம் தராதமையால் வகுப்பறைகளும் வெறிச்சோடிக் கிடந்தன.

தமக்கான சம்பள முரண்பாட்டை தீர்த்து தருமாறு கூறிய இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டார்கள்.

அத்தோடு பாடசாலைக்கு வழமையாக வாகனங்களில் பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு வரும் ஒட்டோ சாரதி ஒருவர் இவ்வாறு ஸ்ட்ரைக் பண்ணினால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

ஆகவே இந்த ஆசிரியர் சம்பள முரண்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முடிவுக்கு கொண்டு வந்து எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுமாறு வேண்டுகிறோம் எனக் கூறினார்து

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2024இல் வெளியிடப்பெற்றது